Registered as a Newspaper பக்கங்கள் 6 விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 05 திருவள்ளுவர் ஆண்டு 2025 பங்குனி 16 (29.3.94) செவ்வாய்க்கிழமை ஓசை 39

நல்லூர் [illegible] நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

## அன்னை பூபதி பொது அறிவு தேர்வு; 400 பாடசாலைகளில் நடத்த ஏற்பாடு

கடந்த நான்கு ஆண்டுகளாக ஆண்டுதோறும் விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினால் அன்னை பூபதி நினைவாக பாடசாலைகளில் நடத்தப்படும் பொது அறிவுத்தேர்வு இவ்வாண்டும் எதிர்வரும் மார்ச் 30ஆம் திகதி பிற்பகல் ஒரு மணிக்கு வட தமிழீழத்தில் நானூறுக்கும் கூடுதலான பாடசாலைகளில் நடைபெறவுள்ளது. வெளிமாவட்டங்களுக்கான வினாத்தாள்களும், எழுது தாள்களும் தேர்வு தொடர்பான அறிவுறுத்தல்களும் கடந்த வாரம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கான வினாத்தாள்கள் தேர்வு நடைபெறும் நாளன்று காலை கோட்டக் கல்விப் பணிமனைகளின் ஊடாக (6 ஆம் பக்கம் பார்க்க)

# 1994ஐ அமைதி ஆண்டாக பிரகடனம் செய்க

# டி.பியிடம் துறைசார் வல்லுநர் கோரிக்கை

மணலாற்றில் வீரச்சாவடைந்த

## துணைப்படை வீரர்கள் நினைவாக தாக்குதல்

### இரு படையினர் பலி

(மணலாறு)

கடந்த 22ஆம் திகதி வீரச்சாவு அடைந்த இரு துணைப்படை வீரர்களின் நினைவாக விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் இரு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

22ஆம் திகதி இராணுவத்தினர் தாக்கி வீரச்சாவு அடைந்த லெப். சுப்பிரமணியம், 2-ம் லெப் செல்வராசா ஆகிய துணைப்படை வீரர்களின் நினைவாக கடந்த 26ஆம் திகதி விடுதலைப் புலிகளும் துணைப்படையினரும் சேர்ந்து அரியகுண்டான் இராணுவ முகாமிற்கும் பராக்கிரமபுர இராணுவ முகாமிற்கும் இடையே அமைந்துள்ள காவலரணிலிருந்து 50 யார் தூரத்திலிருந்து இராணுவத்தினர்மீது தாக்குதல் நடத்தினர். இத் தாக்குதலினால் இரு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். விடுதலைப் புலிகள் தரப்பில் சேதமெதுவும் ஏற்படவில்லை.

## கரையோரப் பகுதி மீது எறிகணை வீச்சு

(குருநகர்)

நேற்று முன்தினம் இரவு 9.15 மணியிலிருந்து சுமார் அரைமணிநேரம் மண்டைதீவில் நிலை கொண்டுள்ள சிறிலங்கா இராணுவம் தாக்குதலை நடத்தியது.

எறிகணைகள் யாழ் கரையோரப்பகுதி மற்றும் குடியிருப்புப் பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன. ஆயினும் சேதம் எதுவும் ஏற்படவில்லை அதே

## மக்கள் அவலங்களை நீக்க உதவுக

[கொழும்பு]

இந்த ஆண்டை அமைதி ஆண்டாகப் பிரகடனம் செய்யும்படி ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவிடம் தென்பகுதி துறைசார் வல்லுநர் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது. இவ் அமைப்பு அண்மையில் ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவை நேரில் சந்தித்து நடத்திய பேச்சு வார்த்தையின் போதே இக் கோரிக்கையை விடுத்தது.

நாட்டில் நீண்டகாலமாக நடைபெற்றுவரும் யுத்தம் காரணமாக தொடர்ச்சியான அழிவுகளையும், அவலங்களையும் மக்கள் சந்தித்து வருகின்றனர். இவ்வாறான அழிவுகளிலிருந்து நாட்டைக் காப்பாற்றுவதற்கும் மக்கள் அனுபவித்துவரும் அவலங்களைத் தவிர்த்துக்கொள்வதற்கும் இவ்வாறான அமைதியாண்டுப் பிரகடனம் வழிவகுக்கும் என்று இக் குழுவினர் ஜனாதிபதிக்கு எடுத்துக்கூறியுள்ளனர்.

ஜனாதிபதிக்கும் மேற்படி குழுவினருக்கும் இடையில் நீண்டநேரமாக நடைபெற்ற சந்திப்பின்போது ஜனாதிபதியின் அந்தரங்கச் செயலாளர்கள் உட்பட துறை சார்ந்த செயலர்களும் கலந்துகொண்டனர். அத்துடன் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வணசிங்காவும் கலந்துகொண்டார்.

இக் குழுவினரின் கோரிக்கையை தாம் பரிசீலிப்பதாக டி.பி. விஜேதுங்கா தெரிவித்ததாகவும் பெரும்பாலும் மேற்படி கோரிக்கைக்கு ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா இணங்கிச் செயற்படுவாரேயானால் எதிர்வரும் தமிழ் சிங்கள புத்தாண்டில் இவ்வாறான அமைதிப்பிரகடனம் வெளியிடப்படலாம் என அவ் வல்லுநர் அமைப்புவட்டாரங்களில் எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும் இவ்வாறான பிரகடனம் குறித்து மேற்படி குழுவினரிடம் ஜனாதிபதி உறுதிமொழி எதனையும் வழங்கவில்லையென்று கொழும்பில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதியைச் சந்தித்த மேற்படி துறைசார் வல்லுநர் அமைப்பின் அதிகாரிகள் குழுவில் இந்த அமைப்பின் தலைவர் டாக்டர் அல்விஸ் திருஎல் ஆர். எல் பெரேரா, டாக்டர் குரே, திரு. சரத் அமரக்கோன், திரு. விக்கிரமரத்ன ஆகியோர் அங்கம் வகித்தனர்.

அரசாங்கத்தின் தரப்பில் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா, ஜனாதிபதியின் செயலாளர் விஜயதாஸா, திரு. (6 ஆம் பக்கம் பார்க்க)

### வீர வணக்கம்



அருள்மணி

(யாழ்ப்பாணம்)

யாழ்மாவட்டத்தில் நேற்று சுகவீனம் காரணமாக விடுதலைப்புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவு அடைந்த வீரவேங்கை அருள்மணி (யவ்வர்-ஜெயன் டச்சுறோட் சாவகச்சேரி) என்ற போராளிக்கு விடுதலைப்புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

### வீரச்சாவு



அறிவாளி

கடந்த 24ஆம் திகதி திருமலை வெருகல் பகுதியில் பதுங்கியிருந்த இராணுவத்தினர் மீது மேற்கொண்ட தாக்குதலில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்-

வீரச்சாவடைந்த லெப்டினன்ட் சோமேஸ் (அறிவாளி (பாக்கியராஜா திவ்வியகுமார் 7ஆம் வட்டாரம் சாம்பல் தீவு திருமலை) இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்-

## எறிகணை வீச்சு

(குருநகர்)

நேற்று முன்தினம் இரவு 9.15 மணியில் இருந்து சுமார் அரைமணிநேரம் மண்டைதீவில் நிலை கொண்டுள்ள சிறிலங்கா இராணுவம் ஐந்துக்கும் மேற்பட்ட எறிகணைகளை யாழ் நகரப் பகுதிக்கு விட்டுவிட்டு ஏவித் தாக்குதலை நடத்தியது.

எறிகணைகள் யாழ் கரையோரப்பகுதி மற்றும் குடியிருப்புப் பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன. ஆயினும் சேதம் எதுவும் ஏற்படவில்லை அதே வேளை குடாக்கடலில் இருந்து கடற்படையினரும் தாக்குதலை நடத்தினர். (21)

## மாதகல் பகுதியில் இருந்து மூவர் யாழ். வந்தனர்

(யாழ்ப்பாணம்)

இளவாலை, மாதகல் பகுதி மீது சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையின் போது அப்பகுதிக்குள் அகப்பட்டிருந்த பொது மக்களில் மேலும் மூவர் தமது உறவினர்களுடன் இணைந்துள்ளனர்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் அண்மையில் இளவாலை, மாதகல் பகுதிக்கு மேற்கொண்ட பயணத்தின் போது இம் மூவரையும் தம்முடன் கூட்டி வந்து அவர்களது உறவினர்களிடம் ஒப்படைத்தனர். (நி) (௧)

பல்கலைக்கழக ஊழியர்

## சம்பள உயர்வு கோரி வேலை நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக ஊழியரின் சம்பள அதிகரிப்பு மற்றும் ஒய்வூதியத்திட்டம் அமுல்படுத்தக்கோரி யாழ். பல்கலைக்கழக ஊழியர்கள் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தத்தை மேற்கொள்ள உள்ளனர்.

யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கச் செயற்குழு நேற்றுப் பிற்பகல் சங்கத் தலைவர் ச. க. தனேந்திரன் தலைமையில் ஊழியர் சங்கப் பொது அறையில் கூடி ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் செய்வதென முடிவெடுத்தது.

இது சம்பந்தமாக ஆலோசனை கலந்து அடையாள வேலை நிறுத்தத்தை உறுதிப்

(2ஆம் பக்கம் பார்க்க)

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட

## அரச உத்தியோகத்தருக்கு 1000 ரூபா விசேட முற்பணம்

(வடமராட்சி)

1993ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஏற்பட்ட வெள்ள அழிவையடுத்து பொருள்கள் சொத்துக்கள் அழிந்த அரச உத்தியோகத்தர்களுக்கு ஆயிரம் ரூபா விசேட முற்பணம் வழங்கப்படவுள்ளது.

இதற்கான சுற்றறிக்கை ஒன்று திறைசேரியிலிருந்து யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இச் சுற்றறிக்கையின் பிரகாரம் விசேட முற்பணத்திற்கு விண்ணப்பிக்கும் அரச உத்தியோகத்தரின் பாதிப்புச் சொத்துக்கள் உண்மையென கொடுப்பனவு அதிகாரி திருப்தியடைந்த பின்னரே இப் பணம் வழங்கப்படும்.

வட்டியில்லாத முற்பணம் பத்து மாத தவணையில் அறவிடப்படும். சமயா சமய ஊழியர்களும் சில விதிமுறைகளுக்கு அமைய பெற்றுக் கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (யோ)

பதிக்கு எடுத்துக்கூறியுள்ளனர்.

ஜனாதிபதிக்கும் மேற்படி குழுவினருக்கும் இடையில் நீண்டநேரமாக நடைபெற்ற சந்திப்பின்போது ஜனாதிபதியின் அந்தரங்கச் செயலாளர் உட்பட துறை சார்ந்த வானால் எதிர்வரும் தமிழ் சிங்கள புத்தாண்டில் இவ்வாறான அமைதிப்பிரகடனம் வெளியிடப்படலாம் என அவ் வல்லுநர் அமைப்புவட்டாரங்களில் எதிர்பார்க்கப்படுகின்றது, எனினும் இவ்வாறான பிரகடனம் குறித்து அமரக்கோன், திரு. விக்கிரமரட்ண ஆகியோர் அங்கம் வகித்தனர்.

அரசாங்கத்தின் தரப்பில் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க, ஜனாதிபதியின் செயலாளர் விஜயதாஸ, திரு.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தோல்வியை ஜீரணிக்க முடியா அரசு குண்டர்களை ஏவிவிட்டுள்ளது

### - பொது ஜன ஐக்கிய முன்னணி குற்றச்சாட்டு

(கொழும்பு)

தென் மாகாணசபை தேர்தல் முடிவுகளை ஜீரணிக்க முடியாத குண்டர்கள் சில பொலிஸ் 'அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் தமது ஆதரவாளர் மீது தாக்குதல்களையும் கொலை மிரட்டல்களையும் மேற்கொண்டு வருவதாக பொது ஜன ஐக்கிய முன்னணியின் செயலாளர் டி. மு ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

பொது ஜன ஐக்கிய முன்னணி தென் மாகாணத்தில் பெற்ற அமோக வெற்றியைத் தொடர்ந்து ஆளும் அரசாங்க கட்சி உறுப்பினர்கள்மற்றும் ஆதாரவாளர்கள் பொது ஜன ஐக்கிய முன்னணிக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் வழங்கியவர்கள் மீது தாக்குதல்களையும் வன்முறை மற்றும் மிரட்டல்களையும் மேற் கொண்டு வருவதாக தெரிவித்துள்ளார்.

இக் காரணங்களினால் சென்ற சில தினங்களாக பல அனர்த்தங்கள் ஏற்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. வலஸ்முல்ல பகுதியில் பொது முன்னணிக்கு ஆதரவு வழங்கிய பெண் ஒருவர் வாள் வெட்டுக்கு இலக்காகிப் படுகாயம் அடைந்த நிலை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அரசியலில் ஆயுதப்படையினர் அதிக அக்கறை காட்டுகின்றனர்

### -லக்ஷ்மன் ஜெயக்கொடி குற்றச்சாட்டு

இராணுவம் மற்றும் பொலிஸ் படையைச் சேர்ந்தவர்கள் அரசியலில் ஆர்வம் காட்டி வருகின்றனர் என்று சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினரான லக்ஷ்மன் ஜெயக்கொடி தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் அவசரகால சட்ட நீடிப்பு தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில் இப்போதும் இந்நாட்டில் ஒருமைப்பாடு நிலவுவதாகக் கூறமுடியாது. இவ் அடிப்படையில் நாடு பிளவுபட்டுப் போயுள்ளது.

பூநகரியில் நிகழ்ந்த சம்பவத்திற்குப் பின்னர் இராணுவ நடவடிக்கைகள் எதுவும் வடக்கில் மேற்கொள்ளப்படவில்லை எனவும் தெரிவித்தார்.

## மீன்பிடிப் படகுகள் மீது கடற்படையினர் தாக்குதல்

### மீனவர் கடலில் பாய்ந்து தப்பினர்

(குருநகர்)

நேற்று அதிகாலை 5.45 மணியளவில் பூநகரி கல்முனைக் கடலில் ரோந்து வந்த சிறிலங்கா கடற்படையைச் சேர்ந்த பீரங்கிப்படகு அப் பகுதியில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த மீனவர்களை நோக்கி பீரங்கி, கலிபர் தாக்குதலை நடத்தியது.

அப் பகுதியில் மீன்பிடியில் ஈடுபட்டு நின்ற குருநகர் மீனவர்கள் கடலில் பாய்ந்து உயிர் தப்பி வந்தனர். ஒரு லட்சம் ரூபா பெறுமதியான அவர்கள் சென்ற வள்ளம் மற்றும் வலைகள் என்பன கடற்படையின் தாக்குதலில் சேதம் அடைந்ததாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

நேற்றுக் காலை 5.45 மணியளவில் நடைபெற்ற சம்பவத்தை அடுத்து நீந்தி வந்தவர்கள் இடையில் விடுவலைத் தொழில் வள்ளமொன்றில் ஏறி பிற்பகல் 2

(6ஆம் பக்கம் பார்க்க)

வீரச்சாவு அடைந்த வீரவேங்கை அருள்மணி(யவ்வர்-ஜெகன் டச்சுறோட் சாவகச்சேரி) என்ற போராளிக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

வீரச்சாவடைந்த லெப்டினன்ட் சோமேஸ் (அறிவாளி (பாக்கியராஜா திவ்வியகுமார் 7ஆம் வட்டாரம் சாம்பல் தீவு திருமலை) இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்-

## துணைவேந்தர் துரைராசா; மணிவிழா ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் துரைராசா அவர்களுக்கு மணிவிழா கொண்டாடப்படவுள்ளதுடன் மலர் ஒன்றும் வெளியிட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இலங்கைகம்பன் கழக அமைப்பாளர் திரு. இ ஜெயராஜ், பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவர் திரு ச. க. தனேந்திரன் ஆகியோர் எதிர்வரும் யூன் மாத நடுப்பகுதியில் இதனைக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்.

மலர் வெளியீடு தொடர்பான ஒழுங்குகளைபல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் மேற்கொள்கின்றார்.

(6ஆம் பக்கம் பார்க்க)

பருத்தித்துறைவரும் கப்பல்கள்

## உரிய நேரத்திற்குள் காங்கேசன்திரும்பவேண்டும்

(வடமராட்சி)

பருத்தித்துறை துறைமுகத்தில் பொருள்களை இறக்கும் கப்பல்கள் கடற்படையினர் விதித்த குறிப்பிட்ட நேரத்திற்குள் காங்கேசன்துறைக்கு திரும்பிவிடவேண்டுமென பணிக்கப்பட்டுள்ளது.

இனிமேல் காங்கேசன்துறையில் இருந்து புறப்படும் கப்பல் காலை 6 மணிக்கு பருத்தித்துறைக்கு வந்து மாலை 4-30 மணிக்கு பருத்தித்துறையிலிருந்து காங்கேசன்துறைக்கு புறப்பட்டுவிடும்.

கடற்படையினரால் கப்பல் கப்டனுக்கு விதிக்கப்பட்ட புதிய விதிமுறைப்படி நேற்று முதல் இப் புதிய நேரப்படி

(6ஆம் பக்கம் பார்க்க)

## பல்வேறு படைப்புகளுடன் வெளிச்சம் வெளிவருகிறது

விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக்கழகத்தின் கலை இலக்கிய வெளியீடான 'வெளிச்சம்' மாதாந்த இதழ் (பங்குனி-1994) இன்று வெளிவருகின்றது. இந்த இதழில் தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள் அனைத்துலகப் பெண்கள் நாளையொட்டி வழங்கிய செய்தியுடன் மாலிகாவின் முன்பக்கக் கவிதையும், பிரமஞானி தொடராக எழுதி வரும் ''மனிதனும் வரலாறும்'' கட்டுரையும் இடம் பெறுகின்றன. இவற்றுடன் புதுவை இரத்தினதுரை, இந்திரையன், கனகாம்பிகை கதிர்காமன், நாக. சிவசிதம்பரம் ஆகியோரின் கவிதைகளும், இயல்வாணன், இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் ஆகியோரின் சிறுகதைகளும், தமிழ் அபிமானியும், எழுத்தாளருமாகிய திரு. நாக. பத்மநாதன் அவர்களுடனான நேர்காணலும், திரு. சோ. கிருஷ்ணராசா, இளவவன் ஆகியோரின் கட்டுரைகளும் இந்த இதழில் உள்ளன.

இது வெளிச்சத்தின் இருபத்திநான்காவது இதழாகும்.

## வரி விளம்பரம்


**நவீன மருத்துவம்**

வாத வியாதி, ஆஸ்துமா, தோல் நோய்கள், மலட்டுத் தன்மை, மூலரோகம், நாள்பட்ட காய்ச்சல், இருதய வியாதிகள், சிறுநீர் பெரிய வர்க்குரிய சகல நோய்கட்கும் நவீன எலக்ரோனிக் பரிசோதனைகளும், சிகிச்சையும் இரெட்ணம் வைத்திய சாலை, 129 ஸ்ரேசன் றோட் யாழ்ப்பாணம் (8387)

**தேவை**

சித்திரம் வரைவதில் ஆர்வம் உடையவர்களும் எழுத்துக்களை திறம்பட எழுதக் கூடியவர்களும் தேவை. 1. இதில் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். 2. தகுதிக்கேற்ப ஊதியம் வழங்கப்படும், தொடர்பு தேவன் பல் தொழில் நிறுவனம் கணேசவாணி வீதி, கோண்டாவில் வடக்கு, கோண்டாவில். (7843)

**பாலர் ஆசிரியர் பயிற்சி**

ஆரம்பம் - 1994 - 04 - 02. ஜி. வி. ச (OIL) கடைசித் தகைமை சனி ஞாயிறு நேரில் கற்க முடியாதோர் தபாலிலும் கற்கலாம். பாலர் ஆசிரியர் சங்கம் உயர்கணக் கல்லூரி ஆனைப்பந்தி - யாழ்ப்பாணம். (7861)

**விற்பனைக்குண்டு**

இறைச்சிக் கோழிகளும் 2 மாத பிறவுண் பேட்டுக் குஞ்சுகளும் விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி த.பொ.மே. நிறுவனம் கடற்புலிகள் செயலகம் நவிண்டில் (7862)

**தேவை**

புதிய, பழைய தமிழ் ஆங்கில தட்டச்சு இயந்திரங்கள் தேவை; R. மருதலிங்கம் தொடர்பு: 8/1 அம்மன்வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் (7868)

**விவசாயிகளுக்கு**

பூச்சி புழுக்களால் பாதிப்புறும் பயிர்களுக்கு "மார்க்கோசிக்" பூச்சிகொல்லி விசிறிப் பலன் காணுங்கள்; மார்க்கோசிக் ஒரு நம்பகரமான பூச்சிகொல்லி யாழ் நகரில், மின்சாரநிலைய வீதியில், "லங்கெம்" ஸ்தாபனத்திலும், சமநல சேவை நிலையங்களிலும் விற்பனைக்குள்ளது. "மில்க்வைற்" (சி-8937)

**கொடியேற்றம்**


# விளையாட்டு வீராங்கனைகளிடம் போசாக்கு குன்றிப் போயுள்ளது

## வைத்திய அதிகாரி கதிரவேற்பிள்ளை

(வடமராட்சி)

எனது கண்ணோட்டத்தில் பார்க்கும் போது வீராங்கனைகளிடம் போஷாக்குத் தன்மை குன்றியிருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

இவ்வாறு கரவெட்டி பிரதேச செயலர் பிரிவின் கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி பிரதேச செயலர் திரு. செ. ஸ்ரீனிவாசன் தலைமையில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் நடைபெற்ற போது பிரதம விருந்தினராக கலந்து கொண்ட பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை மாவட்ட வைத்திய அதிகாரி கலாநிதி திரு, சி, கதிரவேற்பிள்ளை தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கும் போது இன்றைய நிகழ்வில் கலந்து கொண்ட வீராங்கனைகள் உடல் உறுதி இல்லாததினால் இளைத்து களைத்துக் காணப்பட்டனர் பொருளாதாரத்தடை இதற்கும் ஒரு காரணம்.

இவ்வகையான விளையாட்டுக்கள் ஒருங்கிணைந்த போட்டிகளில் கழகங்களுக்கிடையில் காணப்படும் வேறுபாடுகளை நீக்கும். அத்துலு அம்மன் கோயில் பகுதியைச் சேர்ந்த வயோதிபர்கள் கூட வீரர் வீராங்கனைகளை ஊக்குவித்திருந்ததை அவதானிக்க முடிந்தது. இது எதைக் காட்டுகிறது என்றால் வயோதிபத்திலும் வாலிபனாக நடப்போம் வாலிபம் திரும்பி வரும் என்பதைக் காட்டுகிறது. இந்த விளையாட்டுக்களை பொழுது போக்காக கருதாமல் பயனுள்ளதாகக் கருத வேண்டும்.

ஒரு மனிதனிடம் ஆர்வமும் ஆற்றலும் இருந்தால் இலக்கியங்களைச் சாதிக்க முடியும் என்றார். மற்றும் சிறப்பு விருந்தினர்களான உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச்சங்க தலைவர் திரு சி.கணபதிப்பிள்ளை, கட்டைவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க தலைவர் திரு ம ஜெகநாதன் ஆகியோரும் உரையாற்றினர். வரவேற்புரையை கரவெட்டி பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் திரு. வே. வீரபத்திரரும், நன்றியுரையை விளையாட்டுக் குழு சார்பில் திரு. வரதராசனும் நிகழ்த்தினர். வெற்றி பெற்ற வீரர்களுக்கு பிரதம விருந்தினர் பரிசில்களை வழங்கினார். (யோ)

### விளையாட்டுப் போட்டி

(தொல்புரம்)

தேசிய சர்வோதய சிரமதான சங்க ஆதரவுடன் இயங்கி வரும் பாலர் பாடசாலைகளுக்கான விளையாட்டுப்போட்டிகள் அண்மையில் வெகு சிறப்பாக நடைபெற்றன.

பருத்தித்துறை முனைக் கிராமத்தில் இயங்கி வரும் வெள்ளையன் பாலர் பாடசாலைக்கான விளையாட்டுப் போட்டி நிகழ்வில் தேசிய சர்வோதய வட பிராந்திய இயக்குனர் கி, சிவசுப்பிரமணியம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தார். பாலர்களின் விளையாட்டு நிகழ்வை பெருந்திரளான மக்கள் கண்டு களித்தனர் (41)

# 'போலி'ப் படையினரிடம் பணம் பறிகொடுத்த வியாபாரி

(கொழும்பு)

படை வீரர்களாகத் தம்மை இனங்காட்டிக் கொண்ட மூன்று ஆயுதபாணிகள் இரத்தினக்கல் வியாபாரி ஒருவரை வழிமறித்து சுமார் 10 லட்சம் ரூபா பெறுமதியான பணம், இரத்தினக்கற்கள், சங்கிலி ஆகியவற்றை கொள்ளையடித்துச் சென்றனர்.

கொழும்பு ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் இருந்து வீட்டுக்கு காரில் திரும்பிச் சென்று கொண்டிருந்த இரத்தினக்கல் வர்த்தகர் ஒருவருக்கே இந்த அனுபவம் ஏற்பட்டது. காரைத்தில் தனியாகச் சென்று கொண்டிருந்த அவரை ரணவிலுள்ள சியம்பலா சந்தியில் வைத்து மூவர் கைகை மூலம் நிறுத்தினார்கள் அவர்கள் இராணுவ சீருடையில் காணப்பட்டனர் இவர்களிடம் துப்பாக்கிகளும் இருந்தன. அருகே ஜீப் ஒன்றும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது

இதனால் இரத்தினக்கல் வியாபாரி அது இராணுவத்தினரின் வீதிச் சோதனை நிலையம் என நம்பினார். மூன்று நபர்களும் அவரையும் அவரது காரையும் சோதனையிட்டனர் பணப்பையைச் சோதனையிட்டு பணம், இரத்தினக்கற்கள் என்பனவற்றை தமது பைகளினுள் திணித்தனர் இதனை அடுத்து அவர்கள் ஜீப்பில் புறப்பட்டுச் சென்று விட்டனர். தாம் நிறுத்தப்பட்டது வீதிச் சோதனை நிலையமல்ல என்பதையும் வழிமறித்தவர்கள் படையினரல்ல என்பதையும் அவ் வர்த்தகர் தாமதமாகவே புரிந்து கொண்டார்

# படையினர் கட்டுப்பாட்டில் தொடர்ந்தும் மட்டு. மாநகரசபை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாநகர சபைக்குரிய கட்டடம் மாநகர சபை நிர்வாகத்திடம் தற்போதைக்கு கையளிக்கப்பட மாட்டாது எனத் தெரிவிக்கப்படுகிறது: சபைக் கட்டடம் அமைந்திருக்கும் பிரதேசம் படையினரால் உயர் பாதுகாப்பு வலயமாக ஏற்கனவே பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண இராணுவத்தளபதி அலுவலகம் மட்டக்களப்பு மாவட்ட இராணுவத் தலைமையகம் என்பன உயர் பாதுகாப்பு வலயத்திற்குள்ளேயே அமைந்திருக்கின்றன. மாநகர சபைக் கட்டடத்தைக் கையளிப்பின் மேற்படி அலுவலகங்களைப் பாதுகாப்பான வேறிடத்திற்கு மாற்ற வேண்டியிருக்கும் அதற்கு பாதுகாப்பான வசதியான கட்டடம் நகரிலும் சுற்றாடலிலும் இல்லை,

இதன் காரணமாக ஏப்ரல் 4ஆம் திகதி மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் சிறிய அறை ஒன்றில் மாநகர சபை கூடவுள்ளது'

### சம்பள

படுத்துவகையில் இன்று அனைத்து ஊழியர்களின் அவசரப் பொதுக் கூட்டம் கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது அதே வேளை இந்தக் கோரிக்கைகள் சம்பந்தமாக பல்கலைக் கழக ஆசிரியர் சங்கமும் சிரேஷ்ட பொது அறையில் விசேட கூட்டம் ஒன்றைக் கூட உள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

நாளை பல்கலைக்கழக அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த ஏனைய சேவைகள் அனைத்தும்ஸ்தம்பிதம் அடை


# நன்றி நவில்கின்றோம்

எமது செல்வியின் நடன அரங்கேற்றத்திற்கு அவரை தயார் செய்து சிறப்புற அரங்கேற்றத்தை நடாத்தித்தந்த திருமதி கிருஷ்சாந்தி இரவீந்திரா குடும்பத்தினருக்கும்,

அரங்கேற்றத்திற்கு மங்கள இசை வழங்கிய சங்கர் குழுவினருக்கும், ரவி, சுதா குழுவினருக்கும், சுந்தர மூர்த்தி, புண்ணிய மூர்த்தி குழுவினருக்கும்,

மங்கள விளக்கேற்றிய நடன ஆசிரியை திருமதி சாந்தினி சிவனேசன், சங்கீத வித்துவான் திருமதி ரஞ்சனா சுந்தரலிங்கம்;


### உழைப்பால்

தமிழ் மக்களுக்கு அந்நியமான மதிப்பீடுகளை முன்நிறுத்தாமல் நிகழ்காலம் எதிர்காலம் - இளைகளுக்குப் பொதத்மான கல்விச் சிந்தனைகளை வெளிப்படுத்தி தம்மைச் சிந்தனை வயப்படுத்தும் தன்மை இவர் கல்விச் சிந்தனையில் இழையோடி நிற்பது குறிப்பிடத்தக்கது.

சரியான, தெளிவான, அறிவுபூர்வமான கருத்துகளை அஞ்சாமல் கூறும் ஆற்றல் உடையவர் சமகாலத்தில் சர்ச்சைக்குரிய தனியார் கல்வி நிறுவனங்கள் (Tutory) பற்றிக் கருத்து வெளியிட்ட அவர், "பள்ளிக்கூடங்கள் அர்ப்பணிப்புடன் கடமை செய்தால், தனியார் கல்வி நிறுவனங்கள் மெல்லச் சாகும்" என்ற கருத்தை உடையவர்; இன்றைய போர்க்கால சூழ்நிலையில் கல்வியில் கவனம் எடுக்காது போனால், அது பின்னால் தமிழர் கல்வியைத் தாழ்நிலைக்குத் தள்ளிவிடும் என்று இன்றைய யதார்த்த நிலையை உணர்ந்து பேசுகிறார்.

### ஊற்று நிறுவனம்

1980 இல் பேராசிரியர் துரைராசா அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது- அவரையே தலைவராகக் கொண்டது வறுமைக் கோட்டின் கீழ் உள்ள மக்களுக்கு உதவி வழங்குதலே இந்த நிறுவனத்தின் பிரதான நோக்கம் வெளிநாட்டு நிதி நிறுவனங்கள் ஊற்றுக்கு உதவி வழங்குவதில் கலந்து கொள்கின்றன- கிராம அபிவிருத்தி, மரநடுகை, விவசாயம் ஆகிய இன்னோரென்ன துறைக்கு உதவி வழங்குவதன் மூலம் சுயசார்புள்ள மக்களை உருவாக்குவதில் ஊற்று நிறுவனம் செயலாற்றி வருகிறது அத்துடன் பேராசிரியர் துரைராசாவின் சீரிய முயற்சியாலும், உழைப்பாலும் இந்த ஊற்று அமைப்பு இமையாணனை அடுத்துள்ள கிராமங்களில் மனித நேய அமைப்புக்களின் உதவியுடன் சுய தொழில் முயற்சிகள், மருந்து நிலையங்கள் போன்றவற்றை அமைத்து அரும்பணியாற்றுகிறது பொதுவாழ்வில் தன்னை அர்ப்பணித்திருக்கும் பேராசிரியர், ஊழலின் நிழல் கூடத் தன் மேல் படாமல் கண்ணியத்தைக் காப்பாற்றி வந்திருக்கிறார்

இத்தனைக்கும், பேராசிரியர் வழியில் அவர் தொடர்ந்து செல்ல, அவரது வாழ்வில் உந்து சக்தியாக நின்றவர் அவரது மனைவி ராஜேஸ்வரி 20 4-1967இல் பேராசிரியர் துரைராஜா ராஜேஸ்வரியைத் திருமணம் செய்துகொண்டார் ஏற்ற இறக்கங்களில் உடனின்று உழைக்கும் மனப் பக்குவம் பெற்றவர் பேராசிரியர் மனைவி- அவரின் பிற்கால வாழ்க்கை உயர்வுக்கு தளம் அமைத்தவர் மனைவி தான்

சிலர் பொறுப்பில் இருக்கும் போது மட்டும் பிரகாசித்து, அந்தப் பதவிகள் இல்லாத போது இருக்கும் இடத்தைத் தேடிக் கண்டுபிடிக்க முடியாமல் கனவாய்க் கதையாய் போய்விடுகிறார்கள் பேராசிரியர் கொண்டுள்ள செல்வாக்கு, இவர் பதவி விலகிப் போகும் காலத்தில் வரலாறு காணாத வகையில் மக்கள் எடுக்கும் விழாக்களே நல்ல உதாரணம் பேராசிரியர் மக்கள் மனதிலே எப்பொழுதும் மதிப்பும் செல்வாக்கும் மிக்கவர்


# எமது புதிய வெளியீடுகள்

கமலின்

- **மகளிர் மட்டும்**
  நாசர்- ரேவதி- ஊர்வசி- ரோகிணி
- **அரண்மனை காவலன்**
  சரத்குமார்- சிவரஞ்சனி- கவுண்டமணி
- **சிறகடிக்க ஆசை**
  சிவகுமார்- மஞ்சுளா
- **சின்ன முத்து**
  ராதாரவி- ஸ்ரீவைஷ்ணவி- Y. G, மகேந்திரன்
- **அரஸ்ட் வாரண்ட்**
  அஸ்வினி- நச்சப்பா- வினோத்குமார்

## கொடியேற்றம்

(மானிப்பாய்)

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தின் கொடியேற்றத் திருவிழா இன்று செவ்வாய் நடைபெறவுள்ளது. நண்பகல் 12.00 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பிக்கப்படும் இத் திருவிழா தொடர்ந்து பதினெட்டு தினங்கள் நடைபெறவுள்ளது. (07)

## இன்றைய நிகழ்வுகள்

நெல் வயலில் அசோலாவினைப் பயிர்ச்செய்கை என்னும் தலைப்பில், உடுவில் அம்மன் கோவிலடியிலும் அச்செழு சனசமூக நிலையத்திலும் கருத்தரங்குகள் இன்று நடைபெறவுள்ளன. தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும், விவசாயத் திணைக்களமும் இணைந்து இதனை மேற்கொள்ளவுள்ளன. ஃ ஃ

கோப்பாய் தெற்கு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகள் இன்று பிற்பகல் இரண்டு மணியளவில் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது. அதிபர் கு. பூபாலசிங்கம் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வின் முதன்மை விருந்தினராக இ. சிவானந்தனும், சிறப்பு விருந்தினர்களாக க. கேதீஸ்வரன், இளம்பரிதி, பொன். தியாகம், அருண் மாஸ்ரர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். ஃ ஃ

மருதனார்மடம் கிறிஸ்தவ சேவா ஆச்சிரமத்தைத் தோற்றுவித்தவரான வண. சேவகர் எஸ். செல்வரத்தினம் அடிகளாரின் (பெரியண்ணனின்) 21ஆவது நினைவு தினத்தையொட்டி இன்று பிற்பகல் 4.00 மணிக்கு ஆச்சிரம ஆலயத்தில் நற்கருணை ஆராதனை நடைபெறும்.

---

மங்கள விளக்கேற்றிய நடன ஆசிரியை திருமதி சாந்தினி சிவனேசன், சங்கீத வித்துவான் திருமதி ரஞ்சனா சுந்தரலிங்கம்;

பூஜையை நடாத்திய நீர்வேலி கந்தசாமி கோவில் பிரதமகுரு இராஜேந்திரக் குருக்கள் அவர்கட்கும் இணுவில் பிரம்மஸ்ரீ மகாதேவக்குருக்கள் அவர்கட்கும்.

தலைமை ஏற்று நடாத்திய இராமநாதன் நுண்கலைக்கழக தலைவர் திரு. சபா ஜெயராஜா அவர்கட்கும்

பிரதம விருந்தினர்: திரு. திருமதி S. கனகரத்தினம் (J.P., U.M.) அவர்கட்கும்

சிறப்பு விருந்தினர்: கவிஞர் புதுவை இரத்தினதுரை (பொறுப்பாளர் கலை பண்பாட்டுக்கழகம்) அவர்கட்கும் வாழ்த்துரை வழங்கிய இயலிசை வாரிதி பிரம்மஸ்ரீ N. வீரமணி ஐயா அவர்கட்கும்,

வரவேற்புரை வழங்கிய திரு N. சந்திரமோகன் அவர்கட்கும்

நன்றி உரை வழங்கிய திரு. S ஸ்ரீகணேசன் அவர்கட்கும்

இன்னிசை வழங்கிய இன்னிசைவேந்தர் திரு. பொன் சுந்தரலிங்கம் அவர்கட்கும்

மிருதங்க இசையை வழங்கிய சங்கீத ரத்தினம் திரு. S மகேந்திரன் அவர்கட்கும்

வயலின் வாசித்த சங்கீத வித்துவான் செல்வி பாக்கியலக்ஷ்மி நடராஜா அவர்கட்கும்

சாஜிபாஜா வாசித்த இசை அமைப்பாளர் திரு. மு கண்ணன் அவர்கட்கும்

மண்டபத்தை தந்துதவிய இளங்கலைஞர் மன்றத்தினருக்கும்

ஒளி அமைத்த மனோ கலர் இ. மனோகரன் அவர்கட்கும்,

ஒலி அமைத்துதவிய நித்தி, சவுண்ட், ரஸ்மி சவுண்ட் ஸ்தாபனத்தினருக்கும்

வீடியோ படப்பிடிப்பாளர் EXPO ஸ்தாபனத்திற்கும்,

ஏனைய புகைப்படப்பிடிப்பாளருக்கும் விளம்பரங்களை தந்துதவியோருக்கும்

அரங்கேற்ற மலருக்கு ஆசி உரை தந்துதவியவர்களுக்கும்,

பரதநாட்டிய அரங்கேற்ற அழைப்பிதழையும், மலரையும் அழகுற அச்சேற்றித் தந்த ஸ்ரீ லங்கா அச்சக ஸ்தாபனத்திற்கும்,

பாதுகாப்பு தந்துதவிய காவல்துறையினருக்கும்,

எங்கள் நிகழ்ச்சியை அன்றாடம் வெளியிட்ட ஈழநாதம் ஈழநாடு ஸ்தாபனத்திற்கும்

செல்வியின் பரதநாட்டிய நிகழ்ச்சியை கண்டு களிக்க பெருந்திரளாக வந்து செல்வியை ஆசீர்வதித்த அனைவருக்கும்

இந்த அரங்கேற்றம் சிறப்புற நிகழ பல வழிகளிலும் ஒத்தாசை புரிந்த, நல் எண்ணம் கொண்ட அனைவருக்கும் எமது இதயம் கலந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

### திரு. திருமதி P. S. சிங்கம்

| | |
|---|---|
| சிங்கம்ஸ் இல்லம் | சிங்கம்ஸ் பார்மஸி |
| கோண்டாவில் மேற்கு. | யாழ்ப்பாணம். |

(சி-8938)

---

தவிர்ந்த ஏனைய சேவைகள் அனைத்தும் ஸ்தம்பிதம் அடையும் என எதிர்பார்க்கப்படுகிறது

---

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

## விஞ்ஞான பீடம்

1992/93 கல்வியாண்டிற்கான முதலாவது அரையாண்டுப் பரீட்சைகள் 1994 ஏப்பிரலில் நடைபெறவுள்ளன. மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் விண்ணப்பப் படிவங்களை 1994-04-10 இற்கு முன்னதாக சமர்ப்பிக்கவும்.

பின்வரும் அலகுகளில் பரீட்சை நடைபெறும்:

btg 11, btg 12, bg 13, ehg 11, cg 13, phg 11, pg 13, csg 11, csg 12, zog 12, zog 11, zg 11, mpg11, pmg 12 mag11, amg 13. msg 11, msg 12 stg 11, btg 21, btg 24, bg 22, chg 23, cg 27, phg 21, pg 24, csg 21, csg 22, zog 21. zog 22, zg 21, mpg 22, pmg 22, mag 22, amg 24, msg 23, stg 21, btg 81, btg 32, bg 31, chg 31, cg 34, cg 35, cs 05, phg 33, pg 34, csg 31, csg 33, zog 31, zog 32, zg 31, mpg 33, mpg 32, pmg 32, mag 32, amg 32, msg 31, msg 33, stg 31.

(சி 8939)

---

அரெஸ்ட் வாரண்ட்

அஸ்வினி- நச்சப்பா- வினோத்குமார்

மேலும் புதிய 4 படங்கள் தணிக்கையின்பின் வெளியாகும்

வீடியோ ஓடியோ போட்டோஸ்ரட் தேவைகளுக்கு

மாருதி வீடியோ விஷன்

பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி

(சி-8941)

---

## நினைவு கூருகின்றோம்...

## 1994-03.29

1985-ம் ஆண்டு இதே தினத்தில் வீரச்சாவெய்திய

✠ முருகப்பன் உலகநாதன் (அக்கரைப்பற்று-அம்பாறை)

1989-ம் ஆண்டு வல்வெட்டித்துறைப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

லெப்.சதீஸ் (திருநாவுக்கரசு சிறிதரன்-நெடியகாடு-வல்வெட்டித்துறை)

அச்சுவேலிப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

சல்மான் (மூர்த்தி - காதி அபூபக்கர் வீதி-யாழ்)

1993-ம் ஆண்டு யாழ்.மாவட்டத்தில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப் பிரிந்த,

கடற்புலி லெப். அரசகுமாரி (பெரிய பேதுரு-வஞ்சியன்குளம்-வங்காலை மன்னார்)

திருமலை-கூனித்தீவுப் பகுதியில் சிறிலங்கா இராணுவம் பதுங்கியிருந்து மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் பலியான மூதூர், கிளிவெட்டியைச் சேர்ந்த விவசாயியான தமிழிளவலுக்கு;

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்

✠ இக்குறிப்பிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

### தமிழீழ விடுதலைப் புலிகள்.

(சி-8936)

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# தேர்தலில் ஆர்வம் காட்டிய அரசு வசதி செய்வதில் அக்கறையில்லை

### - மட்டு. மாநகரசபை உறுப்பினர் கவலை

(மட்டக்களப்பு)
உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கு ஆர்வம் காட்டிய அரசு அவை வசதியாக இயங்குவதில் ஆர்வம் காட்டுவதாக இல்லை, இவ்வாறு மட்டக்களப்பு மாநகர சபைக்கு தெரிவான முக்கிய உறுப்பினர் ஒருவர் கவலை தெரிவித்தார்.

பாதுகாப்புப் படையினரால் உயர் பாதுகாப்பு வலயம் எனப் பிரகடனப்படுத்தப்பட்டு, கிழக்கு மாகாண இராணுவத் தளபதி அலுவலகம், மட்டக்களப்பு மாவட்ட இராணுவத் தலைமை அலுவலகம் என்பன செயற்படும் பகுதியினுள்ளே மாநகர சபைக் கட்டடமும் இருக்கிறது- இம் மாநகரசபைக் கட்டடத்தைப் புதிய நிர்வாகத்திடம் கையளிப்பதற்கான முயற்சிகள் எதுவும் இதுவரை செய்யப்படவில்லை. மண்முனை வடக்குப் பிரதேச செயலகத்தின் சிறிய அறையொன்றில் ஏப்ரல் 4ஆம் திகதியன்று மாநகர சபைக் கூட்டம் நடத்தப்படவுள்ளது. அச் சிறிய அறையில் கூடுவதை விட வெபர் விளையாட்டரங்கில் கூடாரம் அடித்து கூட்டம் நடத்துவது உசிதமாக இருக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பிரதமர் ரணில் எதிரணிக்கு விடுத்துள்ள புதிய சவால்

(கொழும்பு)
சப்ரகமுவ மாகாண சுகாதார அமைச்சரைச் சுட்டதேன்? முடியுமென்றால் வடக்கிற்குப் போய் பிரபாகரனைச் சுடுங்கள், இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பொதுஜன ஐக்கிய முன்னணிக்குச் சவால் விட்டார்.

சூரியவெவ நகரில் நடந்த கூட்டத்தில் பேசிய பிரதமர் இவ்வாறு சவால் விட்டார்.

## மதவாச்சியில் இராணுவம் ஆயுதங்கள் மீட்பு

(கொழும்பு)
மதவாச்சி, குட்டிகல ஆகிய இடங்களிலிருந்து துப்பாக்கி மற்றும் ஆயுதங்களை கைப்பற்றியுள்ள படையினர் இவை ஜே. வி. பியுடன் தொடர்புடையனவா என தீவிரமாக விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

குட்டிகல பகுதியில் வேட்டைத் துப்பாக்கி ரிபீட்டர் ரவைகள், கல்கட்டஸ் துப்பாக்கிகள், நான்கு ரி. 56 வகை ரவைகள் 17 சுற்று என்பன மீட்கப்பட்டுள்ளன.

மதவாச்சியில் ரி-56 போன்ற துப்பாக்கி, ரி - 56 துப்பாக்கி ரவைகள் ஐந்து சுற்று என்பன மீட்கப்பட்டன.

## பொலிஸ்திணைக்களம் மீது ஊர்காவற்படை அதிருப்தி

### அடிமைபோல் நடத்துகின்றதாம்

(கொழும்பு)
ஊர்காவல் படையினர் பொலிஸ்திணைக்களம் தம்மை அடிமைகள்போல் நடத்துவதாகப் புகார் தெரிவித்துள்ளனர்.

நாள் ஒன்றுக்கு 55 ரூபா மாத்திரமே படியாக வழங்கப்படுவதாகவும் எட்டு மணித்தியாலம் தவிர்ந்த மேலதிக வேலைக்குத் தமக்குக் கூடுதல் படி வழங்கப்படுவதில்லை என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## சுற்றாடல் சுகாதாரம் பேண மலேரியா இல்லாதொழியும்

### - மு. இராசதுரை

(தொல்புரம்)
நாம் ஒவ்வொருவரும் மிகுந்த அக்கறையோடு சுற்றாடல் சுகாதாரத்தினை பேணுவோமானால் மலேரியா நோயினை இல்லாதொழிக்கலாம். இந்த நோய்க் காவியான நுளம்பை பெருகவிடாமல் தடுப்பதனால் மனித சமுதாயத்திற்கு ஏற்படும் நோய் அபாயம் கட்டுப்படுத்தப்படுகின்றது.

இவ்வாறு மானிப்பாய் வலி தென் மேற்கு பிரதேச சபை ...அந் நோயாளியை இனங்கண்டு வைத்திய சிகிச்சைக்கு உட்படுத்த வேண்டும். இப்படியான உடனடி நடவடிக்கைகளினாலும் பெருமளவு நோயைக் கட்டுப்படுத்த முடியும். அத்தோடு நன்னீர் நிலைகளில் அதிகளவு இந்த நுளம்புகள் பெருகுவதனால் இதனை கட்டுப்படுத்த சுற்றாடல் சுகாதாரத்தினை பேணிப்பாதுகாக்க அனைவரும் முன்வரவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். மேலும்

### விதைநெல் பெறுதல்

யாழ் மாவட்டத்திற்கு ஏற்ற உயர் விளைச்சல் தரக்கூடிய தூய நெல்லினங்களான பீ ஜீ 34-6, பீ ஜீ. 350, பி. டபிள்யூ 351, ஏ. ரீ. 353, ஏ. ரீ. 402 ரக என்பவை தேவைப்படும் விவசாயிகள் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன வட்ட, கோட்ட தொடர்பாளர்களுடன் அல்லது விவசாயப் போதனாசிரியர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

### சித்திவிநாயகர் சம்பியனாகியது

(வடமராட்சி)
பருத்தித்துறை திக்கமுனை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற கபாடி இறுதிச் சுற்றுப்போட்டியில் சுப்பர்மடம் சித்திவிநாயகர் விளையாட்டுக்கழகம் வடமராட்சியில் சாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

இக் கழகம் சென்தோமஸ் விளையாட்டுக் கழகத்துடன் மோதி மாவட்ட மட்டத்திலான போட்டிக்கு தெரிவாகியுள்ளது. (யோ)

### இலங்கைப் பணிப் பெண்ணை

# அடிமைபோல் வைத்திருந்த குவைத் வாசிக்கு தண்டனை

(பூஸ்டன்)
தனது வீட்டை விட்டுச் சென்றால் கொலை செய்யப் போவதாகப் பயமுறுத்தி இலங்கைப் பணிப்பெண் ஒருவரை அடிமையாக வைத்திருந்ததற்காக குவைத்வாசி ஒருவர் குற்றவாளியாகக் காணப்பட்டார்.

நான்கு மாத காலமாக அப்பணிப்பெண் வெளியில் செல்லவோ, யன்னல் மூலம் வெளியில் பார்க்கவோ அனுமதிக்கப்படவில்லை என்றும் தொலைபேசி பேசவோ, தபால்கள் அனுப்பவோ அனுமதிக்கப்படவில்லை எனவும் அப்பெண் கூறினார். 27 வயது நிரம்பிய வசந்த செ.த என்பவரே இவ்வாறு அடைத்து வைக்கப்பட்டவராவார்.

பூஸ்டன் பல்கலைக்கழக பட்டதாரி மாணவரான இவருக்கு 10 வருடச் சிறைத் தண்டனையும் 5 லட். டாலர் அபராதமும் விதிக்கப்படும். இத்தண்டனை மே மாதத்தில் வழங்கப்படும், இவரது 21 வயதான மனைவி மீதும் இதே குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

## வாடிக்கையாளருக்கு கடன் வழங்க இல. வங்கி புதிய திட்டம்

(கொழும்பு)
இலங்கை வங்கி அதன் வாடிக்கையாளருக்கு உடனடியாக கடன் வழங்கும் புதிய திட்டமொன்றை ஆரம்பித்துள்ளது. 'ரன் சரக்கும்' என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இத் திட்டத்தின் கீழ் வங்கியின் வாடிக்கையாளர்கள் தேவையேற்படும் போது சொந்த தங்க நகைகளை மாற்றீடாக வைத்து கடன் பெறுவதற்கும் நகைகளைத் திருட்டுப் போகாமல் பாதுகாப்பதற்கும் கணக்கு வைத்திருப்போரும் அவசர தேவைக்கு ஏற்ப குறைந்த வட்டியில் கடன் பெறுவதற்கும், தொழில்துறை முயற்சிகளுக்கு கடன் மற்றும் மேலதிகப் பற்று என்பன பெறுவதற்கும் வசதி செய்யப்பட்டுள்ளது, எனினும் இந்தத் திட்டம் வடபகுதிக்கு இன்னும் விரிவாக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# போதைப்பொருள்களின் பாவனையில் இலங்கை முதலிடம் வகிக்கிறது

### - பிரதிப் பொலிஸ் மா அதிபர்

(கொழும்பு)
வேறு எந்த நாட்டையும் விட இலங்கையிலேயே அதிகமாகப் போதை மருந்துகள் பயன்படுத்தப்படுகின்றன. இவை பெரும்பாலும் இந்தியாவிலிருந்து இலங்கைக்குக் கடத்தி வரப்படுபவையாக இருக்கின்றன-

இவ்வாறு போதைப்பொருள் தடுப்புப் பிரிவிற்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் அன்டன் ஜெயநாதன் செய்தியாளர்கள் பலர் கலந்து கொண்ட கருத்தரங்கு ஒன்றில் பேசும் போது குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில், நீர்கொழும்பு, பேருவளைப் பகுதிகளுக்கூடாக இப் பொருள்கள் கள்ளத்தனமாகக் கடத்தப்படுகின்றது. இதன் பாவனை இலங்கையில் வருடா வருடம் அதிகரிக்கின்றது, இந்தியாவில் மூன்று லட்சம் பெறுமதியான போதைப் பொருள்கள் இலங்கையில் பத்து லட்சம் ரூபாவுக்கு விற்கப்படுகிறது. இதனால் நாட்டுக்கும் அரசுக்கும் எந்த விதமான நன்மையும் இல்லை. சமூக சேவையாளர்கள் எனக் கூறும் பலர் ஏழைக் குடும்பங்களுக்கு உதவுவதாகக் கூறி மத்திய கிழக்கு நாடுகளுக்குச்செல்வதற்கும் பணம் கொடுப்பதும், ஏழைக் குடும்பங்களில் மரணம் ஏற்பட்டால் உதவி செய்வதும் இவ்வாறு நேர்மையற்ற உழைக்கும் பணத்திலேயே ஆகும். 15 ரூபா முதல் 50 ரூபா வரை போதைப் பொருள்கள் பெறப்படக் கூடியதாக இருப்பதால் இளைஞர்கள் மதுபானம் அருந்தாமல் ஹெரோயின் போன்ற போதைப் பொருள்களைப் பயன்படுத்துகின்றனர் எனவும் தெரிவித்தார்.

### இலக்கத்தகடுகள்

# இனவாதம் பேசுபவர்கள் பொருளாதாரம் பற்றி பேசுவதில்லை

### சமிந்த தேரர்

(கொழும்பு)
பெரும்பான்மை இனம் என்று இனவாதம் பேசுபவர்கள் எல்லா இனங்களையும் சேர்ந்த பெரும்பான்மையான மக்கள் பொருளாதார ரீதியாக அனுபவிக்கும் இன்னல்கள் பற்றி ஒன்றுமே பேசுவதில்லை இவ்வாறு நவசமசமாஜக் கட்சியைச் சேர்... டாலென்ன? இனவாதிகளுக்குக் கவலையில்லை. திறந்த பொருளாதாரக் கொள்கை கடைப்பிடிக்கப்பட்டு வந்தமையினாலேயே வடக்கு-கிழக்கு பிரச்சினை உக்கிரமடைந்து யுத்தமாக வெடித்தது. வருடமொன்றுக்கு ஏறத்தாழ 30,000கோடி ரூபாபணத்தை விரயமாக்கும் இந்த யுத்தம் நாடு முழுவதற்கும் ஆபத்தானது எனவும் தெரிவித்தார்.

## மலேரியா ஒழிப்பு துண்டுப் பிரசுர பிரசாரம்

(தொல்புரம்)
தேசிய சர்வோதய சிரமதான சங்கத்தினரின் வடமராட்சி பிரிவு பிரதேச நிலையத்தினர் மலேரியா தடுப்பு வாரத்தினை ஒட்டி ''சுகாதாரத்தைப் பேணுவோம் உடல் நலத்தைப் பாதுகாப்போம்'' எனும் தலைப்பிலான துண்டுப்பிரசுரம் மூலம் மலேரியா ஒழிப்பு சம்பந்தமான கருத்துக்களை மக்களுக்கு தெரிவித்து வருகின்றனர்.

மலசலகூட வசதியில்லாதவர்கள் அதனை ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளல், குடிப்பதற்கு சுத்தமான நீரை பயன்படுத்தல் சமையலுக்கு நல்ல உணவு வகைகளை பயன்படுத்தல், சமைத்த உணவை நோய்காவிகளிலிருந்து பாதுகாத்தல், உணவு உண்ணும் பாத்திரங்கள் உபயோகிக்கப்படும் முறைகள், மலேரியா நுளம்பு உற்பத்தியாவதற்கு ஏதுவான காரணிகளை துப்பரவு செய்தல் போன்ற வழிமுறைகள் அப் பிரசுரமூலம் தெளிவாக அறிவுறுத்தப்பட்டுள்ளன, இச் சிறப்புப் பணியினால் பல மக்கள் நன்மை அடையவும் இந்த கொடிய நோயான மலேரியாவிலிருந்து விடுபடவும் வாய்ப்பு எட்டியுள்ளது. (41)

## மெல்லக் கற்போருக்கான வெளிக்கள ஆய்வுகள்

அபாயம் கட்டுப்படுத்தப்படுகின்றது.

இவ்வாறு மானிப்பாய் வலி தென் மேற்கு பிரதேச சபை பொது நூலக மண்டபத்தில் செயலாளர் இ. கணேஸ்வரன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மலேரியா ஒழிப்புக் கருத்தரங்கில் மானிப்பாய் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் திரு மு. இராசதுரை கலந்துகொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர் இந்த நோயின் தாக்கத்தையும், இதனால் ஏற்படும் மரண ஆபத்தையும் அனைவரும் நன்கு உணர வேண்டும். ஒருவர் மலேரியா நோய் வாய்ப்பட்டால் நாடல் சுகாதாரத்தினை பேணிப்பாதுகாக்க அனைவரும் முன்வரவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். மேலும் இன்றைய காலகட்டத்தில் போதிய அளவு மருந்து வகைகள் இல்லாத போதிலும் எம்மால் இயன்றவரை அவசர சிகிச்சை அளிக்கப்பட்டு அதற்கான மருந்து வகைகளும் நோயாளிகளுக்கு வழங்கப்படுகின்றன. இந்த நோய்க்கான மருந்தை ஐந்து நாட்கள் தொடர்ந்து பாவித்து நோயினை கட்டுப்படுத்த நோயாளிகள் அக்கறை கொள்ளல் அவசியமானதொன்றாகும் எனத் தெரிவித்தார். (41)

...யில் பத்து லட்சம் ரூபா

## இலக்கத்தகடுகள் விநியோகம்

(தொல்புரம்)

வலிமேற்கு பிரதேச சபையினால் துவிச்சக்கர வண்டிகளுக்கான நடப்பு ஆண்டிற்குரிய இலக்கத்தகடுகள் விநியோகிக்கப்படுகின்றன. சுழிபுரம், சங்கானை, வட்டுக்கோட்டை, அராலி உப அலுவலகங்களில் காரியாலய நேரத்தில் மேற்படி இலக்கத் தகடுகளை பெற்றுக் கொள்ளலாமென வலிமேற்கு பிரதேச சபை செயலாளர் திரு. க. திரவியம் தெரிவித்துள்ளார் (41)

யாக அனுபவிக்கும் இன்னல்கள் பற்றி ஒன்றுமே பேசுவதில்லை இவ்வாறு நவசமசமாஜக் கட்சியைச் சேர்ந்த வண. பத்தேகம சமித்த தேரர் தெரிவித்தார்

காலி நகரில் அண்மையில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் பேசிய அவர் மேலும் கூறுகையில், நாட்டை சர்வதேச நாணய நிதியம் ஆண்டாலென்ன? உலகவங்கி ஆண்

## விசேட ஆணையாளர் நியமனம்

(தொல்புரம்)

வலிகாமம் மேற்கு, தென்மேற்கு பிரதேச சபைகளுக்கான புதிய விசேட ஆணையாளர்களை வடக்கு கிழக்கு மாகாணசபை அமைச்சு நியமனம் செய்துள்ளது.

மேற்படி நியமனத்தின் பிரகாரம் வலிமேற்கு பிரதேச சபையின் விசேட ஆணையாளராக திரு. கா. சந்திரராசா அவர்களும், வலி தென்மேற்கு பிரதேச சபையின் விசேட ஆணையாளராக திரு. து. வைத்திலிங்கம் அவர்களும் இந்த மாதம் 15ஆம் திகதி முதல் நியமனம் பெற்றுள்ளனர். (41)

## ரூபா 10 லட்சம் ஒதுக்கீடு

(தொல்புரம்)

சண்டிலிப்பாய் பிரதேசத்திற்கு பிரமாண அடிப்படையிலான வேலைத் திட்டங்களுக்கு நடப்பு வருட செலவினங்களுக்கென பத்து லட்ச ரூபா நிதி வடக்கு கிழக்கு மாகாண சபையினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிதியிலிருந்து கல்வி, ஆரம்ப சுகாதாரம், நீர்ப்பாசனம், விவசாயம், கால்நடை, வன அபிவிருத்தி, குழாய்க்கிணறு அமைத்தல், வீதிகள் திருத்தம் போன்ற வேலைத் திட்டங்களுக்குச் செலவிட திட்டமிடப்பட்டுள்ளதாக சண்டிலிப்பாய் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (41)

ந்து யுத்தமாக வெடித்தது. வருடமொன்றுக்கு ஏறத்தாழ 30,000கோடி ரூபாபணத்தை

## அஷ்ரப்பின் அரசியல்

(கொழும்பு)

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம். அஷ்ரப் மார்ச் முதலாம் திகதியிலிருந்து எம். பி பதவிக்கான சம்பளம் பெறுவதை நிறுத்திக்கொண்டார். மற்றும் வசதிகளையும் பெறுவதை அஷ்ரப் நிறுத்திவிட்டார்.

## சைக்கிள் விநியோகம்

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல், நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (வ. து.) மூலம் கொழும்பிலிருந்து வாதுவலில் 24ஆம் திகதி வியாழக்கிழமை இறக்கப்பட்ட 300 சைக்கிள்களும், 50 நீர் இறைக்கும் இயந்திரங்களும், கால் நடை உணவுப் பொருள்களும் வழங்கப்படவுள்ளன. (24)

ஃ ஃ

(யாழ்ப்பாணம்)

வேலணை ப. நோ. கூ. சங்கத்திற்கு இம்முறை வாதுவ கப்பலில் எடுத்துவரப்பட்ட துவிச்சக்கர வண்டிகளை தனது எல்லைப்பரப்பிற்குட்பட்ட அங்கத்தவர்களிற்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்குவதற்காக துவிச்சக்கர வண்டி தேவையானவர்களிடமிருந்து மேற்படி சங்கம் விண்ணப்பங்களை கோரியுள்ளது. (88)

# வெளிக்கள ஆய்வுகள்

(பருத்தித்துறை)

அம்பன் ராஜன் நகர் பாடசாலையில் வடமராட்சி, வட இந்து தொலைக்கல்வி பிராந்திய நிலையத்தினர் மெல்லக் கற்கும் மாணவர்களுக்கான

வெளிக்கள ஆய்வுகளை மேற்கொண்டு அறிக்கைகளைத் தயாரித்துள்ளனர். தொலைக் கல்வி பிராந்திய நிலைய சிரேஷ்ட போதனாசிரியர் திரு ச. சித்திரவடிவேலின் அனுமதியுடன் ஆரம்ப கல்வி போதனாசிரியர் திரு எம், ஸ்ரீபதியின் தலைமையில் தொலைக் கல்வி பயிற்சியில் இரண்டாம் வருட ஆரம்ப கல்வி ஆசிரியர் குழு ராஜன் நகரில் உள்ள அம்பன் (ஆரம்ப) அ. த. க. பாடசாலையில் இம்மெல்லக் கற்போருக்கான வெளிக்கள ஆய்வுகளை மேற்கொண்டது.

இதில் மெல்லக்கற்கும் மாணவர்களின் சகல விடயங்களும் முழுமையாக ஆராயப்பட்டன மாணவர்களின் நிலை, சுற்றாடல் பெற்றோரின் தொழில் நிலை, பெற்றோரின் கல்வி நிலை, தற்போதைய பாடசாலைச்சூழல் கல்விகற்பிக்கும் ஆசிரியர்களின் விபரம், இப்பாடசாலையை நிர்மாணித்த தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பற்றிய விபரங்கள் என்பன பற்றி ஆராயப்பட்டது.

பின்னர் மெல்லக் கற்கும் மாணவர்களின் தன்மைகள் முழுமையாக ஆராயப்பட்டன, இவ்வெளிக்கள ஆய்வுகளை பருத்தித்துறை பிரதி கல்விப்பணிப்பாளர் திரு ச. செல்வராஜா, அம்பன் அ. த. க. பாடசாலை அதிபர் திரு ச. ஸ்ரீதரன் ஆகியோர் நேரில் பார்வையிட்டு வேண்டிய உதவிகளையும் வழங்கினர்

## கிராம ஆய்வுகள்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் புள்ளிவிபரப் பகுதியினர் தென்மராட்சிப் பகுதியிலுள்ள கிராமங்களில் கிராம ஆய்வினை மேற்கொண்டனர். தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவின்கீழ் வரும் கைதடி, நாவற்குழி, மறவன்புலவு மேற்கு ஆகிய பகுதிகளில் இடம் பெற்ற கிராமிய எழுச்சிப் பாசறை நிகழ்ச்சிகளின்தொடர்பாக இக்கிராம ஆய்வு மேற்கொள்ளப்பட்டதுடன், தரவுகள் திரட்டப்பட்டு, முறையாக தொகுக்கப்பட்டு முழுமையான ஆய்வறிக்கையும் தயாரிக்கப்பட்டுள்ளது.

## புனரமைப்பு

கால்நடை சுகாதாரத் திணைக்களம், மற்றும் கூட்டுறவுத் திணைக்களம் என்பவற்றுடன் இணைந்து தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவு சங்கத்தினை புனரமைப்பு செய்து வருகின்றது. இச் செயற்பாட்டின் மூலம் தீவன உற்பத்தித் திட்டங்களும் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ளது.


உ

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் ஸ்ரீமுக வருடம் பங்குனித் திங்கள் 18ஆம் நாள் (31-03-1994) வியாழக்கிழமை காலை 8.49 மணிமுதல் 9-11 மணி வரையுள்ள அனுஷ நட்சத்திரமும் இடப லக்கின சுபமுகூர்த்த வேளையில்

| எனது புத்திரன் | எமது புத்திரி |
|---|---|
| திருநிறைச் செல்வன் | திருநிறைச் செல்வி |
| **சசிகரன் (சசி)** | **ரேவதி** |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

யாழ். வண்ணை அருள்மிகு காமாட்சி அம்பாள் (நாச்சிமார் கோவில்) திருமண மண்டபத்தில் திருமணம் நடைபெற பெரியோர்களால் நிச்சயிக்கப் பெற்றிருப்பதால் இம் மங்கள நன்நாளில் தாங்களும் குடும்ப சமேதராய் வருகை தந்து புதுமணத் தம்பதிகளுக்கு நல் வாழ்த்துக்கூறி சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

வரவேற்புபசாரம் :

மணமகன் இல்லம் 31-03-94 மாலை 4-00 மணி தொடக்கம் 6-30 மணி வரை

தங்கள் நல்வரவை நாடும்

திரு. இரா. பத்மநாதன்
601, கே. கே. எஸ். வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

(7855)

திரு. திருமதி பொ. பரமநாதன்
654/3, கே. கே. எஸ். வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.


**வதைபடு நிலையில் விடுபட நாங்கள் வீட்டினில்தோட்டம் விருப்புடன்செய்வோம்**

## நில அளவையாளராவதற்கான பயிற்சி

அரச நில அளவையாளராவதற்கான முன்னோடி நில அளவைப் பயிற்சியை தமிழீழ நில அளவையாளர் ஒருங்கிணைப்புக்கழகம் வழங்கவுள்ளது இப்பயிற்சியினைப் பெற விரும்பும் கீழ்க்காணும் தகுதியுடைய ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்;

1. கல்வித்தகைமை;

I) க. பொ. த. (உயர் தரம்) கணிதம் உட்பட 3 பாடங்களில் சித்தி - அல்லது

II) க. பொ. த. (சாதாரண தரம்) கணிதம், விஞ்ஞானம் உட்பட 6 பாடங்களில் திறமைச் சித்தி; அல்லது

III) நில அளவைத் துறையில் குறைந்தது 3 வருட அனுபவமும், க. பொ. த. (சாதாரண தரம்) கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தி - அல்லது

IV) தொழில் நுட்பக்கல்லூரியில் படவரைஞர் சான்றிதழ் உள்ள க.பொ.த. (சா|த) கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தி· அல்லது

V) மேற்கண்ட தகைமைகட்கு உயர்வான தராதரம் உடையவர்கள்.

2. வயதெல்லை: 17 வயதுக்கும் 28 வயதுக்கும் இடைப்பட்டவர்கள்.

3. பயிற்சிக்காலம்: 6 மாதம்

4. விசேட பயிற்சி: 6 மாத பயிற்சி முடிவில் திறமையான முதல் 30 பேருக்கு தொடர்ந்து 6 மாதம் விசேட பயிற்சி அளிக்கப்படும்;

5. விண்ணப்ப முடிவுத் திகதி, 20-04-1994

6. நேர்முகப் பரீட்சை: தகுதியுடையவர்கள் எனத் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கட்கான நேர்முகப் பரீட்சை பற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

7. விண்ணப்பம் அனுப்பும் கடித உறையின் இடப்புற மேல் மூலையில் ''நில அளவைப் பயிற்சி'' என்று குறிப்பிடவும்.

8. ஒவ்வொரு விண்ணப்பதாரியும் தமது பூரண சுய விபரத்துடன் விண்ணப்பிக்கவும். விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

இயக்குநர் (பயிற்சிப் பிரிவு)

தமிழீழ நில அளவையாளர் ஒருங்கிணைப்புக் கழகம்
ஈழநாதம் இல, 31, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்,

(இ-8876)


# வீரப்பனைக் காட்டி கொடுப்போருக்கு 2 கோடி ரூபா சன்மானம்

(சென்னை)

வீரப்பன் மற்றும் அவருடைய சகாக்கள் ஏழுபேரை பிடித்துத் தந்தால் இரண்டு கோடி ரூபா சன்மானம் வழங்கப்பட இருப்பதாக தமிழகம் மற்றும் கர்நாடக அதிரடிப்படை பொலிசார் அறிவித்துள்ளனர்.

சந்தன மரக் கடத்தல் விவகாரத்தில் சம்பந்த பட்டிருக்கும் வீரப்பனையும் அவரது சகாக்களையும் கைது செய்யும் நோக்கில் தமிழகப் பொலிஸ்துறையின் சுமார் 200 பேரும், கர்நாடக அரசின் அதிரடிப் படையைச் சேர்ந்த சுமார் 400 பேரும் எல்லைப் பாதுகாப்பு படையைச் சேர்ந்த சுமார் 800 பேரும் கடந்த எட்டு மாதங்களாக ஈடுபடுத்தப்பட்டிருப்பது தெரிந்ததே.

வீரப்பன் மற்றும் அவரது சகாக்களின் உருவப்படங்களுடன் தமிழ்நாடு கர்நாடக பொலிசார் கூட்டாக வெளியிட்டிருக்கும் சுவரொட்டி மற்றும் துண்டுப் பிரசுரங்களில் இந்த நபர்களிடம் பேசுவது இவர்களுக்கு உணவு, பீடி, சிகரெட், மதுபானம், துணிமணி, பாதணி போன்றவை கொடுத்துதவுவது இவர்கள் பற்றிய விபரம் அறிந்தும் தெரிவிக்காமல் இருப்பது போன்றவையும் குற்றமாகவே கருதப்படும் எனப் பொது மக்களுக்கு எச்சரிக்கையும் விடப்பட்டுள்ளது.

# அவமதிப்பு சுவரொட்டிகளுடன் எந்தத் தொடர்பும் இல்லை

**- நடராசன் தெரிவிப்பு**

(சென்னை)

சென்னை உயர் நீதிமன்ற நீதிபதிகளை அவமதிக்கும் வகையில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்ட விவகாரத்தில் தமக்கு எதுவித தொடர்பும் இல்லை என்று நடராசன் தெரிவித்துள்ளார்.

முதல்வர் ஜெயலலிதாவின் சிநேகிதியான சசிகலாவின் கணவரான நடராசன் சென்னை உயர் நீதிமன்றத்தில் ஆஜரான போது அவர் மேலும் கூறுகையில், நான் நிரபராதி. இதை நிரூபிக்க எனக்கு வாய்ப்பு அளிக்கும் வகையில் என்னையும் வழக்கில் சேர்த்து என் வாதத்தையும் கேட்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

நீதிபதி மிஸ்ரா பதிலளிக்கையில் பொலிஸ் அதிகாரியின் விசாரணை அறிக்கை வந்த பின்னர் அதில் உங்கள் பெயர் உள்ளதா என்பதைப் பொறுத்து உங்களின் வாதத்தை எடுத்துரைக்க வாய்ப்பு தரப்படும் என்றார்.

# தி. மு. க. சின்னம் முடக்கப்பட்டால் தமிழகம் அதைத் தாங்காது

**கருணாநிதி எச்சரிக்கை**

(சென்னை)

தி. மு. கவின் சின்னமான உதயசூரியன் சின்னத்தை முடக்கிவிடும் அளவுக்கு இன்று முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறது. அந்த எண்ணம் வெற்றி பெற்றால் தமிழகம் தாங்காது என்று தி. மு. க தலைவர் மு. கருணாநிதி தெரிவித்தார்.

தூத்துக் குடியில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் பேசிய அவர் மேலும் கூறுகையில், தி. மு. கவைப் பிளக்க உதவும் கோடரியைத் தேடினார்கள், ஆனால் தி. மு. க என்ற மரத்தைப் பிளக்க கத்தரிக்கோல் தான் கிடைத்தது. நடை தவழ்ந்து பழகியவர்கள் இன்று என்னைத் தலைவரா எனக் கேட்கும் நிலை வந்துவிட்டது எனக் கோயாக்சாமியை பெயர் குறிப்பிட ... வந்தது. அதன்பிறகு 71ல் காமராஜ் ராஜாஜி போன்றவர்களையே தோற்கடித்து ஆட்சிக்கு வந்தோம் 13வருட வனவாசம் அனுபவித்தோம். ஆட்சி இல்லாத அந்த நேரத்திலும் உங்களோடுதான் இருந்தோம்; எங்களுக்கு ஓட்டுப் போட்டு வெற்றி பெற வைக்காவிட்டாலும் அந்த ஓட்டுப் போடாத ஆட்களைத் தேடித்தான் பார்ப்பேனே என்று தான் உங்களைத் தேடி வந்து கொண்டிருக்கிறேன்.

76-ல் ஜனநாயகத்தை காப்பாற்ற முயன்றதற்காக ஆட்சியிலிருந்து அகற்றப்பட்டோம். அதன் பிறகு இலங்கையில் வாழும் ஈழத் தமிழர்களைக் காப்பதற்காக குரல் கொடுத்ததற்காக ஆட்சியை இழந்தோம்,

91-ல் தேர்தலில் தி. மு. க ... காந்தி கொல்லப்பட்டார். பழி தி. மு. க மீது போடப்பட்டது. தி. மு. க வெற்றி பெறும் நிலை மாற்றப்பட்டது. அனுதாபத்திற்கு பெயர்போன தமிழக மக்கள் எதையும் ஆராயாமல் திடீரென்று முடிவு எடுக்கக் கூடியவர்கள் அப்படிப்பட்ட அனுதாபக்காரர்கள் தமிழக மக்கள் என்பதைத் தெரிந்து கொண்டு தி. மு. க விற்கு புலிகளுடன் தொடர்பு எனக் கூறினார்கள். நீங்களும் நம்பினீர்கள் ராஜிவ் காந்தி கொலை பற்றி விசாரணை நடத்திய கமிஷன் உலகம் முழுவதும் விசாரணை நடத்தி 40 பேரை குற்றம் சாட்டியது. அதில் ஒருவன் கூட தி. மு. க காரன் இல்லை. 56 ஆண்டு கால அரசியல் அனுபவமுள்ள என் பேச்சை நீங்களும் முத...

# அமெரிக்க அதிபர் நடத்திய உண்ணாவிரத போராட்டம்

(வாஷிங்டன்)

அமெரிக்க அதிபர் பில் கிளிண்டன் அண்மையில் ஒரு நாள் உண்ணாவிரதப் போராட்டமொன்றை நடத்தியுள்ளார்.

அமெரிக்காவிலும், உலகின் ஏனைய பகுதிகளிலும் நிலவும் பட்டினிக் கொடுமையின் பால் உலகின் கவனத்தை ஈர்க்க உதவும் முயற்சியாகவே அமெரிக்க அதிபர் பில் கிளிண்டனும், உப ஜனாதிபதி அல் கோரும் கடந்த புதன்கிழமையன்று உண்ணாவிரதம் இருந்தனர்.

உலகில் தினமும் 35 ஆயிரம் பேர் பட்டினியால் சாகிறார்கள் என்ற கவலைக்குரிய உண்மையை உலகிற்கு உணர்த்தும் முகமாக ஒஹியோ மாநில ஜனநாயக கட்சி காங்கிரஸ் உறுப்பினர் ரொனி ஹோல் தெரிவித்த யோசனையைத் தொடர்ந்து காங்கிரஸ் உறுப்பினர்கள் பத்துப் பேர் உண்ணாவிரதப் போராட்டத்தை மூன்று நாட்கள் நடத்தினர். இதனைத் தொடர்ந்தே அதிபர் கிளிண்டனும் உப அதிபர் அல்கோரும் ஒரு நாள் உண்ணாவிரதம் இருந்தனர்,

அமெரிக்காவில் உணவு முத்திரைத் திட்டத்தில் தங்கியிருப்போர் தொகை 2கோடியே74லட்சம் என்பதும், இவர்களில் 85சதவீதமானவர்கள் சிறுவர்கள் மற்றும் பெண்கள் வயோதிபர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்,

# போருக்கு தயாராகும்படி வடகொரியா அழைப்பு

(சியோல்)

போருக்கு தயாராகுமாறு வடகொரியா அதன் பிரஜைகளைக் கோரியுள்ளது வடகொரியத் தலைநகரில் போர்க்காலப்பாதுகாப்பு ஒத்திகைகள் நடத்தப்படுவதாகவும், போர் ஆரம்பிக்குமேயானால் தென் கொரியாவில் தாக்கப்பட வேண்டிய முக்கிய இலக்குகள் கொண்ட வரைபடங்கள் வட கொரியாவில் விநியோகிக்கப்பட்டிருப்பதாகவும் வடகொரியப் பத்திரிகையொன்றை மேற்கோள் காட்டி தென்கொரிய பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

தென்கொரிய பத்திரிகைகள் இது பற்றி மேலும் தெரிவிக்கையில், வடகொரியா இப்போது ஒரு போர் மனோபாவத்தின் கீழேயே இருக்கிறது. போர் ஆரம்பிக்குமேயானால் தென்கொரியா தீப்பற்றி எரியும் என்று வடகொரிய வாசிகள் நம்பிக் கொண்டிருக்கிறார்கள்;

வடகொரியாவிலுள்ள அணு ஆலைகளை ஐக்கிய நாடுகளின் நிபுணர்கள் மேற்பார்வை செய்வதற்கு வடகொரியா அனுமதி வழங்க மறுத்ததையடுத்து கொரியக் குடாப் பகுதியில் பதற்றம் அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்க சூறாவளியில் 17 பேர் உயிரிழந்தனர்

(வாசிங்டன்)

அமெரிக்காவின் அலாமாபா மாவட்டத்தில் வீசிய சூறாவளிக் காற்றின் காரணமாக 17பேர் உயிரிழந்தனர் மேலும் 90க்கும் அதிகமானோர் காயமடைந்தனர். இந்த சூறாவளிக் காற்றின்போது தேவாலயம் ஒன்றின் கூரை சரிந்து விழுந்ததில் பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்த பக்தர்களே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர், இதேவேளை மாலையில் மற்றுமொரு சூறாவளி வீசும் எனவும் வானிலை அவதான நிலையம் எச்சரிக்கை செய்துள்ளது குறிப்பிடத்தக்கது;

# சந்தேக நபர்களை கும்பல் படுகொலை


## 1-ம் வருட நினைவஞ்சலி

பிறப்பு 1916-01-11



இறப்பு 1993-03-27

### திரு. பத்தலோமிஸ் யோசெப் அன்ரன்

இரக்கமும் சாந்தமும் மிகுந்த கிருபையுள்ள யேசுவே உமது சித்தத்தின்படி உம்மிடம் வந்துவிட்ட பத்தலோமிஸ் யோசெப் அன்ரன் அவரின் ஆத்துமம் விண்ணுலகில் உம்மோடு கூட வீற்றிருக்க கிருபை ...

பத்தரோமிஸ் யோசெப் அன்ரன் அவரின் ஆத்துமம் விண்ணுலகில் உம்மோடு கூட வீற்றிருக்க கிருபை கூர்ந்தருளும்; ஆண்டவரே உமது தயவின் முடிவில்லா இன்பத்தை இவர் மேல் பொழிந்தருளும் சுவாமி அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக புதுச்செட்டித்தெரு வியாகுலமாதா ஆலயத்திலும் தாளையடி புனித அந்தோனியார் ஆலயத்திலும் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. உற்றார், உறவினர், நண்பர்களை எம்முடன் இணைந்து இவருக்காக செபிக்க அழைக்கிறோம்;

அருட்சகோதரிகள்
இல்லம்,
தாளையடி.

(7867)

# 7-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
5-09-1930

மறைவு
29-03 1987

## இளையவி கதிரவேலு
(தெல்லிப்பளை)

ஆண்டு ஏழு ஓடி மறைந்தது
ஆருயிர்த் தலைவனை நாங்கள் இழந்து
ஈண்டு எங்களை இனிதாய் ஆக்கிட
இலங்கி உழைத்தவன் நாமம் மறையுமோ?
மாண்டு மாளாப் புகழ் பெறு அண்ணலே
மலரடி வணங்கிப் போற்றுதல் செய்கிறோம்
மீண்டும் ஒருமுறை பிறப்பதேல் எங்களின்
ஆசை தீர உங்களை அழைக்கின்றோம்

ஒடக்கரை விநாயகர்வீதி, மனைவி, மக்கள்,
சங்கானை. மருமக்கள், பேரப்பிள்ளைகள்,

(7865)

கேட்கும் நிலை வந்துவிட்டது எனக் கோபால்சாமியை பெயர் குறிப்பிடாமல் சுட்டிக் காட்டினார்

அத்துடன் தமிழகத்தில் 67-ல் தி மு க ஆட்சிக்கு

தோம்,

91-ல் தேர்தலில் தி. மு க தான் வெற்றி பெற்று தமிழகத்தில் ஆட்சி அமைக்கும் என்றிருந்த நிலையில் ராஜீவ்

கால அரசியல் அனுபவமுள்ள என் பேச்சை நீங்களும் முதலில் கேட்பதே இல்லை பிறகு தான் அப்போதே சொன்னான் கருணாநிதி என்பீர்கள் எனவும் தெரிவித்தார்;

# கட்சிக்குள் ஜனநாயகத்தை சுயலாபத்திற்காக பலியிட்டார்

## கருணாநிதி மீது வை. கோ. குற்றச்சாட்டு

(சென்னை)

குடும்பத்திற்காகவும், சுயலாபத்திற்காகவும் கட்சிக்குள் ஜனநாயகத்தைக் கெடுத்தவர் கருணாநிதி. நேர்மையான வன்முறையற்ற அரசியலுக்கு வழிகளுக்கு எங்களுக்கு ஆதரவு அளிக்க வேண்டும் என்று வாக்காளர்களிடம் நாம் கோரிக்கை விடுக்கவுள்ளோம். இவ்வாறு மதுரைக்கு வந்த வை. கோபாலசாமி செய்தியாளர் மத்தியில் பேசுகையில் தெரிவித்தார்;

அவர் மேலும் கூறுகையில் மைலாப்பூர்! பெருந்துறை தொகுதிகளில், எங்கள் கட்சியின் சார்பில் வேட்பாளரை நிறுத்துவோம்; தேர்தல் பிரசாரத்தின் போது மத்திய அரசின் திட்டமிடாத போக்கினால் விலைவாசிகள் உயர்ந்து நிற்கின்றமை பற்றியும், மத்திய அரசின் புதிய பொருளாதார கொள்கைகளினால் நாட்டிற்கு பேராபாயம் கதிருப்பது பற்றியும், அதி; மு. அரசின் மக்கள் விரோத நடவடிக்கைகள் மற்றும் லஞ்சலாவண்யங்கள், கோடிக்கணக்கில் மக்கள் பணத்தை விரயம் செய்யும் ஆடம்பரப் போக்கு நீதித்துறை பத்திரிகை ஆகியன மீதான மிரட்டல் பற்றியும் மக்களுக்கு எடுத்து விளக்குவோம்.

காங்கிரஸ் கட்சி பற்றிய கேள்விகளுக்கு பதிலளிக்கையில், காங்கிரஸ் கட்சியின் நிலை என்ன என்பது அக்கட்சியினருக்கே தெரியவில்லை என்றும், நீண்டகாலமாக காங்கிரஸ் எதிர்க்கட்சியின் பணியைச் செய்யவில்லை என்றும் முதல்வரைப் புகழ்வதையே வாழப்பாடி வேலையாகக் கொண்டு இருந்தார் என்றும், தற்போது தான் இந்த நிலை மாறியிருக்கிறது; என்றும் வை; கோபாலசாமி மேலும் தெரிவித்தார்.

மேலும் இடது கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களுடன் கூட்டணி பற்றிப் பேசியிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

திருச்சியில் நடைபெற்ற பொதுக்குழுக் கூட்டத்திற்குப் பின்னர் மறுமலர்ச்சி பெற்ற தி: மு; க நாற்றுக்கள் நிறைந்த வயலாக செழித்து வளர்ந்திருக்கிறது: கருணாநிதியோ களைகள் நிறைந்த வயலாக காட்சிதருகின்றார் என்றும், தி.மு.க பொதுக்குழுக் கூட்டத்தின் முடிவுகள் பற்றி தேர்தல் ஆணையகத்திற்கு தெரிவிக்கப்பட்டிருக்கிறது என்றும் தெரிவித்தார்;

# பொலிசார் துப்பாக்கிச் சூடு பாக்.கில் நாலு பேர் பலி

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் சிறுபான்மையினப் பெண்களுக்கு எதிராக பொலிசாரும் படையினரும் நடந்து கொள்வதாக குற்றம் சாட்டி பாகிஸ்தானில் நேற்று முன்தினம் பொது வேலை நிறுத்தம் கடைப்பிடிக்கப்பட்டது

இவ் வேலை நிறுத்தத்தின் போது பொலிசார்துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் நால்வர் கொல்லப்பட்டனர். ஆர்ப்பாட்டக்காரர்களால்சிலவாகனங்கள் தீக்கிரையாக்கப்பட்டன சிந்து மாகாணத்தில் பெரும் பதற்றம் நிலவியமை குறிப்பிடத்தக்கது;

# ஆப்கான் சண்டைகளில் 40 பேர்வரை உயிரிழப்பு

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் கடந்த நாட்களாக நடைபெறும் சண்டைகளில் நாற்பதுக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர் எனவும், நூற்றியம்பதுக்கும் அதிகமானோர் காயமடைந்தனர் எனவும் கூறப்படுகிறது

அதிபர் ரபானிக்கு விசுவாசம் தெரிவிக்கும் படையினருக்கும் பிரதமர் கெக் மத்தியாருக்கு விசுவாசம் தெரிவிக்கும் படையினருக்குமிடையிலே மோதல்கள் இடம்பெற்று வருவது தெரிந்ததே;

# கும்பல் படுகொலை

(சௌலோலோ)

தெற்கு பிரேசிலில் கொல்லப்பட்ட தாதியொருவரின் நண்பர்களும் உறவினர்களும் அத் தாதியைக் கொன்றவர்களென்று சந்தேகத்தின் பேரில் பொலிஸ் நிலையமொன்றில் தடுத்து வைக்கப்பட்டிருந்த மூவரை பொலிஸ் நிலையத்திற்குள் புகுந்து சுட்டும் அடித்தும் கொன்றனர்.

கொல்லப்பட்ட இத் தாதியை அடக்கம் செய்த பின்னர் சுமார் ஆயிரம் பேர் இவ்வாறு பொலிஸ் நிலையத்தினுள் புகுந்து மூன்று சந்தேக நபர்களைக் கொன்றனர். கும்பல் பொலிஸ் நிலையத்தினுள் புகுந்த போது பொலிசார் பார்த்துக் கொண்டு நின்றிருந்தனர், கொல்லப்பட்டவர்களில் ஒருவர் வைத்தியராவார். இவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. ஏனைய இருவரும் வெளியே இழுத்தெடுக்கப்பட்டுக் கொல்லப்பட்டனர்;

## இராணுவ பலம் கூடாது

பிராந்தியத்தில் நிலைமைகளை பேணுவதற்கு இராணுவ பலம் உபயோகிக்கப்படக் கூடாது. அது தோல்வியில் முடிவடையும்- எந்த ஒரு புது உலக அமைப்பும் இராணுவ பலத்தை நம்பியிருக்க முடியாது என முன்னாள் சோவியத்தின் ஜனாதிபதி மிக்கேல் கொப்பசேவ் தெரிவித்தார்-


யா/கோப்பாய் தெற்கு றோ. க. த. க பாடசாலை, கோப்பாய்

## இல்ல விளையாட்டுப் போட்டி

காலம்: 29-03-94 பி. ப. 2-00 மணி.

பிரதம விருந்தினர்
உயர்திரு இ. சிவானந்தன்
பிரதிக் கல்விப் பணிப்பாளர் (யாழ், கல்வி வலயம் II)

சிறப்பு விருந்தினர்கள்

1. திரு. க. கேதீஸ்வரன் (உ. அ. அ. கோப்பாய்)
2. திரு. இளம்பரிதி (அரசியற்றுறைப் பொறுப்பாளர், யாழ். மாவட்டம்)
3. திரு. பொன். தியாகம் (பொறுப்பாளர், மாவீரர் பணிமனை, தமிழீழம்)
4. திரு. அருண் மாஸ்ரர் (கல்வி மேம்பாட்டுப் பேரவை)

போட்டி சிறப்புற வாழ்த்துவோர்:-
நியூ லெட்சுமி பவான்,
இருபாலைச் சந்தி, கோப்பாய்.

(7866)

### சிந்தனைக்கு

ஒருவர் பெறக் கூடிய சிறந்த ஆசான் கட்டாயத் தேவை ஆகும்.

- ப்ரான்சுவா தெனா நூ

ஈழநாதம்

81, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 29-03-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023
தபால் பெட்டி எண் 05

## சமாதானத்தின் விரோதிகள்

இனப்பிரச்சினைக்கு சமாதான ரீதியில் அரசியல் தீர்வு ஒன்று காணப்பட வேண்டும் என்று பல தரப்பிலும் பேசப்படுகின்றது இது குறித்து அரசியல்வாதிகள் மத நிறுவனங்கள் உட்பட பல சக்திகள் பேசுகின்றன; அதற்கான சில முயற்சிகளையும் எடுத்துமுள்ளன.

கடந்த சில மாதங்களில் பல மதக் குழுக்கள் நல்லெண்ண விஜயங்களை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வந்து சென்றுள்ளன. அவர்கள் தமது சக்திக்கு ஏற்ற வகையில் தொடர்ந்தும் சமாதான முயற்சிகளை மேற்கொண்டும் வருகின்றனர்.

அடுத்து வடக்கு, கிழக்கு மாகாணத்தின் ஆளுநரும் சமாதானத் தீர்வே ஒரே வழி, இனப்பிரச்சினையைப் பேச்சுவார்த்தை மூலமே தீர்க்க முடியும் எனத் தெரிவிக்கின்றார். இஸ்ரேலும்-பலஸ்தீனியரும் பேசலாம் என்றால் நாம் ஏன் பேச்சு நடத்த முடியாது என்கிறார்

இதேவேளை, சிங்கள அரசியற் கட்சிகள், குறிப்பாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையில் கூட்டுச் சேர்ந்துள்ள பொது ஜன ஐக்கிய முன்னணியினரும் சமாதானம் பற்றியே பேசுகின்றனர் வடக்கு கிழக்கில் இருப்பது பயங்கரவாதப் பிரச்சினையல்ல, இனப்பிரச்சினையே, அதற்கு இராணுவத் தீர்வு சாத்தியமாகப் போவதில்லை எனவும் கூறுகின்றனர்.

எதிர்த் தரப்பில் தனியாக மேல்மாகாண முதலமைச்சர் சந்திரிகா குமாரணதுங்கா மட்டுமல்ல, வேறும் பலரும் இதுபற்றிப் பேசியுள்ளனர். இதில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரான கே. பி. ரட்னாயக்காவின் கோரிக்கையும் கவனத்திற் கொள்ளக் கூடியது. அவர் ''அரசாங்கம் தனது தூதுக் குழு ஒன்றை யாழ்ப்பாணம் அனுப்பி விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் பேச வேண்டும்'' என கோரியுள்ளார்.

### சிறப்புக் கட்டுரை

# உழைப்பால் உயர்ந்த துணைவேந்தர் துரைராசா

பேராசிரியர் அ. துரைராசா 1988 செப்டெம்பரில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராகப் பதவி ஏற்றார். போர்க் காலச் சூழ்நிலைசார்ந்த நெருக்கடி நிர்வாகத்தை (CRISIS MANAGEMENT அவர் பொறுப்பேற்று நடத்தியது பாராட்டத்தக்கதாகும். 1988 - 1994காலப்பிரிவில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் மூடப்படாது தொடர்ந்தியங்க வைத்தது இவரது பாரிய சாதனை. இந்த வரலாற்று நிர்ப்பந்த காலத்தில் பல இன்னல்கள் மத்தியிலும் பல்கலைக் கழகத்தின் நிர்வாகத்தையும், நடைமுறையையும் வழிநடத்திச் சென்ற பேராசிரியர் துரைராசாவின் சேவையைப் பல அமைப்புகள் பாராட்டுவதுநல்லவிஷயம்தான்- முழு யாழ்ப்பாணமே பாராட்டுகிறது.

துரைராசா 1934 - இல் நொவெம்பர் 10-ஆம் நாளன்று வடமராட்சியில் இமையாணன் என்ற புகழ்பெற்ற கிராமத்தில் செல்லம்மாவுக்கும் வேலுப்பிள்ளை அழகையாவுக்கும் இரண்டாவது பிள்ளையாகப் பிறந்தார். இவர் பிறந்த இமையாணன் மண்ணிற்கு ஒரு தனிச் சிறப்புண்டு சங்கிலி மன்னனின் தளபதி இமையாணன் வாழ்ந்த காரணத்தின் அடிப்படையில் இந்தக் கிராமத்துக்கு இமையாணன் என்று காரணப்பெயர் - சாதாரணமாக வாழ்ந்த குடும்பத்தின் பொருளாதாரச் சூழலில் துரைராசா பள்ளிப் பருவம்வரை படித்து. வளர்ந்தது எல்லாம் இமையாணன்தான்.

### ஆரம்ப இடைநிலைக் கல்வி

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் தனது ஆரம்பக் கல்வியை ஆரம்பித்த துரைராசா, எஸ். எஸ்.சி வரைஅப்பாடசாலையில் கல்விபயின்று திறமையாகத் தேர்ச்சி பெற்றார் உயர் கல்வியைத் தொடரும் நோக்கத்துடன் யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் பிரபல்யமாக விளங்கும் ஹாட்லிக் கல்லூரியில் மாணவராய்ச் சேர்ந்தார். சிறு பராயத்திலேயே தகைமை சான்ற மாணவர் அவர். சிலர் ஆரம்ப சூரர்களாக இருந்து நாளடைவில் பின்னடைவதும் உண்டு ஆனால் துரைராசா தனது முயற்சியால் திறமையை வளர்த்துக்கொண்டு கல்வியில் முன்னேறியவர். அவரை உருவாக்குவதில் உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரியின் பங்கும் குறிப்பிடத்தக்கது. ஆரம்பக் கல்வி அவரது கல்வி முன்னேற்றத்துக்கு நல்ல தளமாக அமைந்தது கல்வியில் வெற்றிப் படிகளில் அவர் ஏறி வருவதற்கு உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி ஒரு காரணமாக அமைந்தது என்றால் மிகையாகாது.

ஹாட்லிக் கல்லூரியில் மாணவராயிருந்த போது கணிதம், பிரயோக பொறிமுறை, பௌதிகம், இரசாயனவியல் ஆகியபாடங்களைக் கற்றார் எச். எஸ். சி யில் முதன்மையாகத் தேறிய பெறுபேறுகளின் அடிப்படையில் துரைராசா பல்கலைக்கழக நுழைவு விஞ்ஞானப் பரிசிலைப் பெற்றார் அந்த ஆண்டில் யாராலும் எட்ட முடியாத அளவிற்கு அவரின் பெறுபேறுகள் முன்னணியில் நின்றதால் 1952 -இல் அனைத்து இலங்கையிலும் விஞ்ஞானப் புலமைப் பரிசு துரைராசா ஒருவருக்குத்தான் கிடைத்தது.

'கருவிலே திருவுடையார்' என்று கூறுவார்களே, அவர் அப்படியுமில்லை ஒரு மாணவனுக்கு அவனிடம் அமைந்துள்ள ஆற்றல் வன்மைக்கும் அதனை வெளிப்படுத்துவதற்கும் உதவுபவர்கள் ஆசிரியர்கள். இந்த வகையில் விஞ்ஞான பாடங்

சகதியில் கையை நனைத்துக் கொண்டு கல்வி அமைச்சரானார். அவர் கையாண்ட கல்விக் கொள்கை தமிழ் மாணவர் கல்வியில் பாதிப்பை ஏற்படுத்தியது சேர்ந்தாற்போல் துரைராசாவின் புலமைப் பரிசிலைத் தடுக்கும் ஒரு கோணத்தில் கல்வி அமைச்சர் தஹநாயக்காவின் அணுகுமுறை அமைந்தது.

அப்பொழுது விஞ்ஞானம், கலை, கீழைத்தேய கற்கை நெறி என்ற ஒவ்வொரு துறைக்கும் ஒரு புலமைப் பரிசில்என்பதுடன், பொறியியல் மற்றும் கணிதமும் ஒரு நெறியாகக் கருதப்பட்டு புலமைப்பரிசில் வழங்கப்பட்டது. ஒரு பாடத்தில் புள்ளி குறைவாக இருந்தால் புலமை பரிசிலை ரத்துச் செய்யலாம் என்ற அடிப்படையில் கல்வி அமைச்சினால் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஆனால் துரைராசா அனைத்துப் பாடங்களிலும் உச்ச புள்ளிகளைப் பெற்றிருந்ததால் தஹநாயக்காவினால் புலமைப் பரிசிலைத் தடுக்க முடியவில்லை. அத்துடன் சிங்களவர், தமிழர் - அவர் எவராயிருந்தாலும் பெறுபேறுகளின் அடிப்படையில் புலமைப் பரிசில் வழங்கப்பட வேண்டும் என்று அவரது பேராசிரியர்கள் அழுத்தம் பிரயோகித்தார்கள் சிலரைப் பொறுத்தவரை அந்தத் தர்மம் இப்போது மழுங்கிப் போய்விட்டது இந்தப் புலமைப் பரிசில் அவருக்கு எட்டாது போயிருந்தால், துரைராசாவின் பெற்றோரின் பொருளாதார நிலை, அவர் சொந்தப் பணத்தில் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகம் போக அனுமதித்திருக்காது.

| | |
|---|---|
| ஜூலை 1953 - | |
| ஜூன் 1957 - | பொறியியல் பட்டதாரி மாணவர், இலங்கைப் பல்கலைக்கழகம் |
| ஜூலை 1957- | |
| மார்ச் 1958 - | குடியியற் பொறியியல் போதனாசிரியர், இலங்கைப் பல்கலைக்கழகம் |
| ஏப்ரல் 1958 - | |
| ஆகஸ்ட் 1958 - | கனிஷ்ட உதவிப் பொறியியலாளர், பகிரங்க வேலைப்பகுதி (P,W.D ) |
| ஒக்ரோபர் 1958- | |
| டிசம்பர் 1961 - | கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம், கலாநிதிப் பட்டத்துக்கான ஆய்வு |
| ஜனவரி 1962- | |
| ஜூன் 1962 - | உதவிபணி பொறி முறைப் பொறியியலாளர், லண்டன். |
| ஜூலை 1962 - | குடியியற் பொறியியல் விரிவுரையாளர் நியமனம், சிறிலங்கா பல்கலைக்கழகம். |
| செப்டெம்பர் 1969 - | |
| செப்டெம்பர் 1970- | விடுப்பில் பேராசிரியர் பணி வார்டலூ பல்கலைக்கழகம், கனடா. |
| டிசம்பர் 1971 - | குடியியற் பொறியியல் பேராசிரியர் நியமனம், பேராதனை வளாகம், சிறிலங்கா பல்கலைக்கழகம். |
| மே 1975- | |
| செப்டெம்பர் 1977 - | பீடாதிபதி, பொறியியல் பீடம், பேராதனை வளாகம். |
| ஒக்டோபர் 1977- | |
| டிசம்பர் 1978 - | விடுப்பில் பேராசிரியர் பணி, பிரிடிஷ் கொலம்பியா பல்கலைக் கழகம், கனடா. |
| பெப்ரவரி 1982- | |
| பெப்ரவரி 1985 - | பொறியியல் பீடப் பீடாதிபதி, பேராதனைப் பல்கலைக்கழகம் (முன்னாள் சிறிலங்காப் பல்கலைக்கழகம்) |

டனில் படிப்பு முடிந்து நாடு திரும்ப வேண்டும்என்ற எந்தக் கட்டுப்பாடும் அப்போது இருக்கவில்லை; கட்டுப்பாடோ தடையோ இல்லாமல் தாராளமாக விலகிக் கொள்ளலாம். அதை அவர் சிறிதும் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை இங்கிலாந்து முதல் அமெரிக்கா வரை அவர் எங்கு வேண்டுமானாலும் தொழில் பார்த்திருக்கலாம். ஆனால், அவர் அங்கு வேரூன்றவில்லை. தமிழ் மண்ணின் மீது அவருக்கு அளவு கடந்த பாசம் நாட்டுக்குச் சேவை செய்ய வேண்டும் என்ற பரந்த மனத்தினர். அதனால் அவர், விடுமுறையில் ஊர்த் திருவிழாக் காலத்தில் மட்டும் கிராமத்தைத் தரிசிக்கும் மனிதராக வாழவில்லை.

### யாழ் பல்கலைக்கழகத் துணை வேந்தர்

பேராசிரியர் துரைராசா படிப்பிற்குரிய மதிப்பிற்குத் தகுந்தவாறு பதவிகளைத் தேடி அலையவில்லை. துணை வேந்தர் பதவி அவரைத் தேடி வந்தது. அந்தப்பதவிக்கு விண்ணப்பிக்காமலேயே 1988- ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திற் துணை வேந்தராக நியமிக்கப்பட்டார். அவர் அந்தப் பதவியைச் சமுதாயப் பொறுப்பாகவே ஏற்றுக் கொண்டார்.

பேராசிரியர் துரைராசா பதவி ஏற்று இரண்டு மாதங்களுக்கெல்லாம் அவரது அலுவலகத்தின் ஜன்னல், கதவுகள் உடைக்கப்பட்டன; ஆனாலும் கலங்கவில்லை அவர். அவரது தார்மீக பலம் அவருக்குத் துணையாய் நின்றது. 1983 இல் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் விஞ்ஞான பீடாதிபதியை மாணவர் அறையில் சிறைவைத்துச் சன்னதம் செய்தார் அவரை மீட்டெடுக்கச் சகபாடிகளான சிங்களவர் தயங்கினர். பீடாதிபதியை மீட்டெடுத்த பெருமை பேராசிரியர் துரைராசாவையே சாரும். பதற்றமோ, குழப்பமோ இல்லாமல் அவர் இதனைச் செய்தது பலரைப் பிரமிக்க வைத்தது.

பல்கலைக்கழகத்தின் சிறப்பு அதன் தலைமைப் பொறுப்பில் உள்ளவரிலும் தங்கியுள்ளது. பொறுப்பில் உள்ளவர் ஆற்றலும், ஆளுமையும் பெற்றிருக்க வேண்டியது மிக மிக அவசியம். அத்தன்மை அனைத்தும் ஒருங்கே அமையப்பெற்று விளங்குபவர் பேராசிரியர் துரைராசா.

துணைவேந்தர் எப்படிப் பழக வேண்டும், எப்படிப் பேசவேண்டும் என்று சில எழுதா விதிகளை ஏற்படுத்தி 'மண்ணில் கால் படாமல்' நடப்பவர்களும் உள்ளனர் ஆனால் பேராசிரியர் துரைராசா வெகு சகஜமாகப் பழகினார் அவரைப் போல் எளிமையாக எல்லோராலும் பழகிவிட முடியாது இந்த வகையில் பார்த்தால் ஓர் சராசரி மனிதன்போல் பழகுவதே அவரது ஆளுமை எனலாம்.

இளமையிலிருந்து பல மைல்கள், பல மணி நேரம் சைக்கிள் ஓடி பேராசிரியர் துரைராசா, தாளங்களில் ஆதிதாளம் என சமித்தியா தாளம் செய்தார். 'தாளம்' என்ற பதத்துக்கேற்ப மாணவரிடமிருந்து எந்தவித லாபத்தையும் எதிர்பார்க்காமலே அவர் செயற்பட்டார். மனிதாபிமானம் நிறைந்த பரிவு அவருடையது.

### துணைவேந்தரின் சாதனைகள்

துணைவேந்தரின் சாதனைகள் பற்றிப் பெரு

குழு ஒன்றை யாழ்ப்பாணம் அனுப்பி விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் பேசவேண்டும்'' என கோரியுள்ளார்?

எதிர்க் கட்சியினரின் இந்நிலைப்பாட்டில் குத்துக்கரணங்கள் நிகழக் கூடுமானாலும் தென் மாகாண சபையில் நடந்து முடிந்த தேர்தல் முக்கியமானதாகும். ஏனெனில் இத்தேர்தல் இனப்பிரச்சினைக்குச் சமாதான ரீதியிலான தீர்வொன்றைக் காணச் சிங்கள மக்கள் அனுமதி அளித்துள்ளார்கள் என்றே கொள்ள வேண்டும். அதாவது, சிங்கள மக்கள் இராணுவத் தீர்வை நிராகரித்துள்ளார்கள்.

இவ்வாறாக, மதஸ்தாபனங்கள், அரசியல்வாதிகள், மக்கள் என சகல தரப்பினரும் இனப்பிரச்சினைக்குச் சமாதான ரீதியில் ஓர் அரசியல் தீர்வு காண வேண்டும் என்பதை ஏற்றுக் கொண்டுள்ள நிலையில், இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு முட்டுக்கட்டையாக இருப்பவர்கள் யார்?

இவ்வாறு கேட்கப்படும் கேள்விக்கு ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் என்பதைத் தவிர வேறு பதில் இல்லை. ஏனெனில், பிரச்சினையுடன் சம்பந்தப்பட்ட அடுத்த தரப்பான விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண தாம் தயாராக இருப்பதாக ஏற்கனவே அறிவித்து விட்டனர். அதற்கேற்ற சூழல் உருவாக்கப்பட வேண்டிய அவசியத்தையும் தெளிவுபடுத்தி விட்டனர்.

இந்நிலையில், சமாதானப் பேச்சுக்களைத் தொடங்குவதும், அரசியல் தீர்வு காண்பதும் அரசாங்கத்தின் பொறுப்பாகும். அரசாங்கம் எந்த வகையிலும் இதனைத் தட்டிக்கழிக்க காரணம் கூற முடியாது. அவ்வாறு தட்டிக்கழிப்பதென்பது சகலதரப்பினரதும் அபிப்பிராயத்தையும் புறக்கணிப்பதற்கு ஒப்பானதே ஆகும்.

ஆனால், இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வு வேண்டும் என்று எழுந்துள்ள பொதுவான கருத்தை திசை திருப்பி விடவோ, அன்றி வேறு வழிகளில் தோற்கடிக்கவோ அரசாங்கம் எண்ணுமானால் இறுதியில் அது தோல்வி அடைவது தவிர்க்க முடியாத ஒன்றாகவே இருக்கும். இதற்கு தென்மாகாணத்தில் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட தோல்வியே நல்லதொரு உதாரணமாகும். எதிரணியினரை ஒடுக்குவதற்கும், சிதைப்பதற்கும் எவ்வளவோ முயற்சிகளை ஐ.தே.க. மேற்கொண்டும் மக்கள் அவர்களின் வெற்றியை உறுதிப்படுத்தியுள்ளார்கள்? இதனை ஐ.தே.க. அரசாங்கம் இனியாவது படிப்பினையாகக்கொள்ளாது போனால் எதிர்காலத்தில் மேலும் பல தோல்விகளைச் சந்திக்க வேண்டி வரும்.

---

களே, அவர் அப்படியுமில்லை ஒரு மாணவனுக்கு அவனிடம் அமைந்துள்ள ஆற்றல் வன்மைக்கும் அதனை வெளிப்படுத்துவதற்கும் உதவுபவர்கள் ஆசிரியர்கள். இந்த வகையில் விஞ்ஞான பாடங்களில் அவருக்குத் தளம்அமைத்துக்கொடுத்தவர்கள் இரு ஆசிரியர்கள் - ஒருவர் திரு றொபேட் நவரெட்ணம், மற்றவர்திரு. எஸ் எஸ் செல்லத்துரை இனி கணிதத்தில் துரைராசாவிற்கு வளம் சேர்த்தவர் திரு ஏ ராஜசிங்கம் ஆசிரியர். கணித பாடத்தை முழுமையாக அறியச் செய்து அந்தப் பாடத்தைகூர்ந்து படிக்கும் அளவிற்கு அவருக்குஆர்வத்தை ஏற்படுத்தியவர் ராஜசிங்கம்.

### பல்கலைக்கழகக் கல்வி

இந்தப் பின்னணியில் இலங்கைப் பல்கலைக் கழகத்தில் குடியியற் பொறியியல் கற்கை நெறியை ஜூலை 1953 முதல் 1957 வரை கற்றுப் பெறுபேறுகளில் குறிப்பிடத்தக்க சாதனையை நிலைநாட்டி பலரது பாராட்டுக்களையும் பெற்றவர்துரைராசா முதலாண்டு இறுதிப் பரீட்சையில் மூன்று 'ஏ' களைப் பெற்று பொறியியல் புலமைப் பரிசிலைத் தேடிக்கொண்டார். அந்த நாளிலேயே இந்தச் சாதனையின் மூலம் பல்கலைக் கழகத்தில் அவருக்கு ஒரு கௌரவம் உண்டாகியது; தொடர்ந்தாற்போல தனது செயற்பாட்டால் பொறியியல் கற்கை நெறி பகுதி ஒன்று மற்றும் பகுதி இரண்டிலும் முதன்மையாகத் தேறி முதல் வகுப்பில் பொறியியல் சிறப்புப் பட்டதாரியானார். அவர் நிலைநாட்டிய சாதனை இன்று முப்பத்தைந்து வருடங்களுககு மேலாகியும் எவராலும் முறியடிக்கப் படவில்லை.

### தொழில் முயற்சிகள்

1957ல் ஜூலையில் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் குடியியற் பொறியியற் துறைப் போதனாசிரியராகச் சேர்ந்து கொண்ட துரைராசா,

தனது சாதனைகளைப் பறைசாற்றாது, 1958 ஏப்பிரலில் பகிரங்க வேலைத் திணைக்களத்தில் (P W D) கனிஷ்ட உதவிப் பொறியியலாளராகச் சேர்ந்தார் சிறிது காலம் பின்னர் - அதாவது1958 ஆகஸ்டில் புதிய பரிமாணங்களை கருத்தில் கொண்டு அந்த வேலையிலிருந்து விலகினார். எந்தத் தொழிலையும் எதிர் மறையாகக் கருதாதவர் அவர்.

### தஹநாயக்காவும் கேம்பிரிட்ஜ் புலமைப் பரிசிலும்

இலங்கைப் பல்கலைக் கழகத்தில் சிறப்புப் பெற்றதன் காரணமாக இங்கிலாந்து கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் பட்டப்பின் படிப்பைத் தொடர அவருக்குப் புலமைப் பரிசில் வழங்கப்பட்டது. கல்வியில் வெற்றி கண்டாலும் முன்னேற்றப் பாதையில் பல நெருக்கடிகளைச் சந்தித்தார் துரைராசா. சிறிலங்கா அரசியலில் இனவாதம் முக்கிய சக்தியாகத் தலையெடுத்த காலம் அது: கொழும்பு அரசியலில் இனவாதிகள் அணி உருவாகத் தொடங்கியது. சமதர்மவாத அரசியலில் பெருந்தலைவராக கருதப்பட்ட தஹநாயக்கா, இனவாத

---

பெப்ரவரி 1982-

பெப்ரவரி 1985 - பொறியியல் பீடப் பீடாதிபதி, பேராதனைப் பல்கலைக்கழகம் (முன்னாள் சிறிலங்காப் பல்கலைக்கழகம்)

1985 முதல் - குடியியற் பொறியியல் பேராசிரியர், சிறிலங்கா திறந்த பல்கலைக் கழகம்.

ஏப்ரல் 1987-

ஆகஸ்ட் 1988 - பீடாதிபதி பொறியியல் தொழில்நுட்ப பீடம் திறந்த பல்கலைக் கழகம்

செப்டெம்பர் 1988 முதல் - துணைவேந்தர், யாழ் பல்கலைக்கழகம்.

ஏப்ரல் 1990 முதல் - ஜனசவிய நம்பிக்கை நிதியச் சபை உறுப்பினர்.

1990 முதல் - தொழில்நுட்பக் கல்வி ஆணைக்குழு உறுப்பினர்.

1994 மார்ச்

முடிய - மீளவும் திறந்த பல்கலைக் கழகம்

### கௌரவப் பதவிகள்

- ஒக்டோபர் 1989 -- 1990 - சிறிலங்கா பொறியியல் மன்றத் தலைவர்
- பட்டயப் பொறியியலாளர், சிறிலங்கா பொறியியல் மன்றம்.
- லண்டன் பொறியியலாளர், மன்ற அங்கத்தினர்.
- சிறிலங்கா விஞ்ஞான அக்கடமி அங்கத்தினர்

**- மதன் -**

பேராசிரியர் துரைராசாவை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தராகவும், கல்வி மானாகவுமே நம்மில் பலருக்குத் தெரியும். கல்வியாளர் மட்டுமல்ல அவர். உலகளவில் புகழ் பெற்று விளங்கும் ஓர் பொறியியலாளர் என்று சிலருக்கே தெரியும். உலக அளவில் அவருக்குப் புகழைத் தேடித்தந்தது அவர் கேபிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் புதிதாக வடிவமைத்த (Simple Shear Apparatus) என்ற பொறிதான். அனைத்துலகிலும் கட்டடப் பொறியியல் மற்றும் மண் பொறி முறையில் (Soil Mechan-ics) அதிக செல்வாக்கைச் செலுத்துவது இவரது விதிதான் அவர் உருவாக்கிய விதி இன்று பல்கலைக் கழகங்களில் கற்றுத்தரப்படுகின்றது. 1962 - இல் இலங்கை திரும்பிய பேராசிரியர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் குடியியற் பொறியியல் துறை விரிவுரையாளராகச் சேர்ந்து, மண்பொறிமுறை என்ற பாடத்தை உருவாக்கிய பெருமையும் இவரைச் சார்ந்தது.

மண்பொறி முறையில் நிபுணத்துவம் பெற்ற பேராசிரியர் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் பல்கலைக் கழகங்களிலும் ஆய்வுச் சொற்பொழிவுகளை நிகழ்த்தியுள்ளார்.

பேராசிரியர் துரைராசாவுக்கு நிலபாவாடை விரித்து வரவேற்றுத் தொழில் கொடுக்கப் பல வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களும், தொழில் நிறுவனங்களும் காத்து நிற்கின்றன. அவர் லண்

### துணைவேந்தரின் சாதனைகள்

துணைவேந்தரின் சாதனைகள் பற்றிப் பெருமைப்படுவதற்கு எத்தனையோ விஷயங்கள் உள்ளன- பேராசிரியர் துரைராசா துணைவேந்தராகக் கோலோச்சிய காலத்தில் தமிழ் மக்களின் கல்வி முன்னேற்றத்துக்கு அவர் நிகழ்த்திய கருமங்கள் யாழ் குடாநாட்டு மக்களின் கவனத்தையும், பாராட்டையும் பெற்றவை,

நெருக்கடி கால நிர்வாகத்தில் அவர் ஆற்றிய சேவைகள் அவர் ஆளுமைக்கு ஒரு உயர் உதாரணம், விவசாய அபிவிருத்திக்கான முயற்சியாக விவசாய பீடம் 1990இல் ஆரம்பிக்கப்பட்டது- மேலும் மீன் பிடித்துறைக்கு ஒரு பீடம் நிறுவி, அதன் மூலம் மீன்பிடியை வளர்க்க ரொஸ்சே பல்கலைக் கழகத்துடன் உடன்படிக்கை கைச்சாத்தாகியுள்ளது போர் காரணமாக அது கிடப்பில் உள்ளது. மேலும் புறநிலைப் படிப்புகள் அலகு, தொழிலாளர் கல்வி, வெளிவாரிக் கற்கை நெறி ஆகியவைகளை நிறுவிக் கல்வியைப் பரவலாக்கியது குறிப்பிடத்தக்க அம்சமாகும், ஆய்வுகளை நூல் உருவில் வெளியிட நோர்வே அரசின் உதவியுடன் அச்சுக்கூடம் ஒன்றை நிறுவும் முயற்சியும் மேற்கொள்ளப்பட்டுள்ளது துணைவேந்தரின் முயற்சியினால் பொறியியல் பீடத்துக்கு ஓர் பேராசிரியர் நியமனம் பெற்றுள்ளார் ஆனால் பொறியியல் பீடத்துக்கு அரசு நிதி வழங்காத நிலையில் பொறியியல் பீடம் ஆரம்பித்த இடத்திலேயே உள்ளது. இதுபோல் எட்டுக் கட்டடங்கள் போர்ச் சூழல்காரணமாகமுடியாத நிலையில் கிடப்பில் உள்ளன. ஏழை மாணவரின் பல்கலைக் கழகக் கல்வியைக்கருத்திற்கொண்டு துணைவேந்தரின் முயற்சியால், துணை வேந்தர் நிதியம் ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டது.

கல்வியில் இவருடைய புலமையும் ஆளுமையும் அனைத்துப் பல்கலைக்கழகங்களுடன் கருத்துகளைப் பரிமாறிக் கொள்ளவும் வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களிடமிருந்துயாழ் பல்கலைக்கழகத்துக்கு உதவிகளைப் பெறவும் உதவின.

### பேராசிரியர் துரைராசாவின் கல்விச் சிந்தனைகள்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தமிழினத்தின் பல்கலைக்கழகம் அது உலகத்தின் சிறந்த பல்கலைக்கழகமாக உருவாக வேண்டும் அதற்காகத் தமிழ் மக்கள் எல்லோரும் பாடுபட வேண்டும் சமூக அக்கறையுடன் ஆய்வுகள்மற்றும்கல்விவழங்குவதன் மூலம் சகல துறைகளிலும் பல்கலைக்கழகம் அகலக் கால்வைத்து இருபத்தி நான்கு மணிநேரமும் மக்களுக்குச் சேவையாற்ற வேண்டும் ஒக்ஸ்போர்ட், கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகங்கள்போல் சமூகத்திலிருந்து விலகித் தந்தக கோபுரம் போல் பல்கலைக்கழகம் செயலாற்றுவது பயன்பொருத்தமாகாது அடிப்படைத்தளத்தில் பல்கலைக்கழகம் காலை ஊன்றிக் கொள்ளவேண்டும். ஆலவிருட்சம்போல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் வளர வேண்டும் என்ற செழுமையான சிந்தனைப் போக்கைக் கொண்டிருந்தார். (2 ஆம் பக்கம் பார்க்க)

# வன்முறையை கட்டுப்படுத்த தவறின் மக்கள் கிளர்வதை தடுக்க முடியாது

## பொலிஸ்மா அதிபருக்கு சிறிமா எச்சரிக்கை

தென்மாகாணசபைத் தேர்தலைத் தொடர்ந்து அங்கு பெரும் வன்முறை சம்பவங்களும் விரும்பத்தகாத நடவடிக்கைகளும் இடம்பெறுவதாகவும் திருமதி சிறிமாவோ பண்டாரநாயகா குற்றம் சாட்டியுள்ளார்;

இத்தகைய விரும்பத்தகாத வன்முறைகளில் ஐக்கியதேசிய கட்சியின் குண்டர் படைகளும், இலக்கத்தகடு அற்ற வாகனங்களில் திரியும் கைக்கூலிகளும் தொடர்ந்து ஈடுபட்டு வருவதாக சுட்டிக்காட்டிய அவர் இவர்களுக்கு உடந்தையாக பொலிசாரும் செயற்பட்டு வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இங்கு வன்முறைகள் தொடராமல் இருப்பதற்கு ஏற்ற நடவடிக்கையொன்றை உடனடியாக மேற்கொள்ளுமாறு எதிர்க்கட்சித் தலைவி பொலிஸ்மா அதிபரைக் கடிதம்மூலம் கேட்டுள்ளார்;

அக்கடிதத்தில் சட்டத்தையும் ஒழுங்கையும் பேணவேண்டியவர்கள் பக்கசார்பாக நடந்துவருவது குறித்து மக்கள் கோபமடைந்துள்ளதுடன் அதற்கு எதிராகக் கிளர்ந்தெழும் சூழ்நிலை தோன்றி வருவதை காணமுடிகிறது. இத்தகைய நிகழ்வு நாட்டிற்கும் நாட்டின் இறைமைக்கும் பெரும் ஆபத்தாக அமையும்.

எனவே இதுகுறித்து தாமதமின்றி நடவடிக்கை எடுக்குமாறும் அநியாயமான உயிரிழப்புகளையும் அழிவுகளையும் தடுத்திட பொலிசார் விரைந்து செயற்படவேண்டும் எனவும் கேட்டுள்ளார்.

மேலும் உயர் அதிகாரிகள் இத்தகைய வன்முறை நடவடிக்கைகளை உடன் தடுத்து நிறுத்தி சட்டத்தையும் ஒழுங்கையும்நிலைநாட்டவேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தென்மாகாண மக்கள் பொறுமையை இழந்துகிளர்ந்தெழுந்து அரசிற்கு எதிராக செயற்படுவார்களேயானால் அது பாரிய விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்ள தான் விரும்புவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்;

யாழ். மாவட்டத்தில்

## வீடுகள் புனரமைத்தல் 5 மில். ரூபா ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

ஒருங்கிணைந்த புனர்வாழ்வுத் திட்டத்தின்கீழ் யாழ். மாவட்டத்தில் வீடுகள் புனரமைத்தல், வீடு கட்டுதல் ஆகியவற்றுக்குரிய குறை நிரப்பு ஒதுக்கீடாக சுமார் ஐந்து மில்லியன் ரூபா கிடைக்கவுள்ளது.

1990-ம்ஆண்டுக்கு முன்னர் யாழ். மாவட்டத்தில் அமுல்படுத்தப்பட்ட இத் திட்டத்துக்குரிய முழுமையான கொடுப்பனவுகள் இதுவரை வழக்கப்படாமல் இருந்தது.

இக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கு மேற்படி ஒதுக்கீடு பயன்படுத்தப்படும் என்று யாழ். செயலகத்தில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (*)

---

உரிய

கப்பல் பருத்தித்துறைக்கு வந்துசெல்லும், இச் சட்டவிரோத முன்னரும் கடற்படையினரால் கப்பல் கப்டனுக்கு விதிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே, (யோ)

---

மீன்பிடிப்

மணியனவில் கரைவந்துசேர்ந்தனர்.

குருநகரைச் சேர்ந்தவர்களான ஜேமிஸ் சந்திரன் (வயது 35) சவுரியான் இந்திரன் (வயது 44) செபமாலை ஜெயக்குமார் (வயது 35) ஆகிய மூவருமே நீந்திக்கரை வந்தவர்களாவர்;

சவுரியான் இந்திரன் என்பவர் சிறுகாயத்துக்கு உள்ளானதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (21)

---

1994 ஐ

தர்மசிறிபீரிஸ், திரு. வேலப்பெருமா, திரு. தம்மிக அமரசிங்க, திரு. ஜினதாசா, திரு. சந்திர விக்கிரமசிங்க, திரு அம்பலவாணர், டாக்டர் லக்ஷ்மன் ஜயதிலக, திரு. எ. சி. ஜெயவர்த்தன, திரு; ஜெயமகா, டாக்டர் ஜெயந்த ஜேவர்த்தனா ஆகியோர் கலந்து கொண்டனர். (*) நி)

---

துணைவேந்தர்

துணைவேந்தரின்மணிவிழா நிகழ்வுகள் கொக்குவில்மேற்கு மஞ்சவனப்பதி முருகன் ஆலய

---

அன்னைபூபதி

வழங்கப்பட இருக்கிறது; தேர்வு அறிவுறுத்தல்களையும் பாடசாலை மாணவர்களின் சுட்டெண் பட்டியலையும் இன்று கல்வி கோட்டங்களில் பெறலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இத் தேர்வில் வட தமிழ் முதில் 50,000 க்கும் கூடுதலான மாணவர்கள் தோற்றவுள்ளனர்.

ஆறு முதல் 13ஆம் ஆண்டு வரையிலான மாணவர்களுக்கு ஏழு பிரிவுகளாக நடைபெறவுள்ள இத் தேர்வில் தேசிய அளவில் ஆகக் கூடுதலான முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு ஒவ்வொரு ஆண்டு பிரிவுக்கும் முறையே தங்கம், வெள்ளி, வெண்கல பதக்கங்கள் அன்னை பூபதி நினைவு நாளன்று வழங்கப்பட இருக்கின்றது அத்துடன் தேர்வில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு கல்விக் கோட்ட மட்டங்களில்

---

ஊர்காவற்றுறை

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

(மட்டுப்படுத்தப்பட்டது)

**அறிவித்தல்**

அலிச்சக்கரவண்டி தேவைப்படும் ஊர்காவற்றுறை ப.நோ.கூ. சங்கத்தின் முழுமையான பங்கைச் செலுத்திய அங்கத்தவர்கள், ஊர்காவற்றுறை ப. நோ. கூ. ச. தலைமைக்காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்,

-பொது முகாமையாளர்,

(சி- 8940)

## பேரிருள் அகன்ற பெரு வேந்தா



# நாம் தொடர்ந்தும் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றோம்

## சட்டத்தரணிகள் அமைப்பிடம் முறையீடு

(மட்டக்களப்பு)

மட்டுநகரில் 'பயங்கரவாத' ஒழிப்புப் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகளில் பலர் தாம் பலத்த சித்திரவதைகளுக்கு ஆளானதாக தம்மைச் சந்தித்த இலங்கை சட்டத்தரணிகள் சங்க சட்ட உதவி நிலையத்தைச்சேர்ந்த சட்டத்தரணிகளிடம் புகார் செய்துள்ளனர்-

இத் தடுப்புக்காவல் கைதிகள் தம்மை விடுதலை செய்யக்கோரி பிரதம நீதியரசருக்கு செய்த விண்ணப்பத்தின் மீது உயர்நீதிமன்றத்தின் பணிப்புக்கு அமைய சட்டத்தரணிகளான அஜித்நாயக்கவும் நிமால் ஹப்பு ஆராய்ச்சியும் அண்மையில் மட்டுநகர் சென்றிருந்தனர்-

82 ஆண்களும் 9 பெண்களுமாக மொத்தம் 91பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள் இவர்களில் 36 பேரை சட்டத்தரணிகள் பேட்டி கண்டுள்ளனர்-

இவர்களில் பொத்துவில் தபால் நிலைய அதிபரும் ஒருவர் தமது குடும்ப விபரம் போன்ற கேள்விகளுக்கு தாம் பதிலளித்ததாகவும் பல மாதங்கள் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தங்களை விடுதலை செய்வதாகக் கூறியதன் பேரில் தமக்கு புரியாத சிங்களத்தில் தட்டெழுத்து செய்யப்பட்ட பத்திரங்களில் தாம் கைச்சாத்திட இசைந்ததாகவும் சுற்றிவளைப்பு நடவடிக்கையிலேயே தாம் கைது செய்யப்பட்டதாகவும் குற்றம் எதுவுமே புரியாத நிலையில் 'குற்ற ஒப்புதல் வாக்குமூலம்' என்ற பெயரில் தாங்கள் எப்படி வாக்கு மூலம் அளித்திருக்க முடியும் என்றும் கைதிகள் சட்டத்தரணிகளிடம் கூறியுள்ளனர்.

பேட்டி காணப்பட்டவர்களை விடுதலை செய்யும் முகமாக சத்தியக்கடதாசி தயாரிப்பது, அடிப்படை உரிமை மீறல் வழக்கு தாக்கல் செய்யும் நடவடிக்கைகள் ஆகியவற்றை தாங்கள் இப்போது மேற்கொண்டிருப்பதாக தெரிவித்த சட்ட உதவி நிலைய கடமை அதிகாரியான சட்டத்தரணி சோமசுந்தரம் கல்லாறைச் சேர்ந்த கைதியான இளம் பெண் ஒருவர் கற்பழிக்கப்பட்டிருப்பதாக புகார் கிடைத்துள்ளது என்ற தகவலையும் வெளியிட்டார்-

இதில் கற்பழிப்பு புகார் சம்பந்தமாக உரிய நடவடிக்கை எடுக்குமாறு மட்டுநகரைச் சேர்ந்த சட்டத்தரணி டி- சி- கின்னையாவை சட்ட உதவி நிலையம் கேட்டுக் கொண்டுள்ளது;

---

தோலவிலை

யில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் தேர்தல் வாக்களிப்பு நிலையத்தில் கட்சி பிரதிநிதியாக கடமை புரிந்தவர் மீதும் தாக்குதல் நடைபெற்

குருநகர் கரையோரத்தில்

## வயோதிபர் ஒருவரின் சடலம் கரை ஒதுங்கியது

(குருநகர்)

நேற்றுக்காலை வயோதிபர் ஒருவரின் சடலம் குருநகர் தொடர்மாடிப் பகுதியில் கரை ஒதுங்கியது.

கால்கள் கட்டப்பட்ட நிலையில் மீட்கப்பட்ட மேற்படி சடலம் றெக்கிளமேசன் மத்தியகிழக்கு வீதியைச்சேர்ந்த பேதுரு (ஐயாத்துரை) ஞானப்பிரகாசம் (வயது 71) என்பவரது என அடையாளம் காணப்பட்டது

மதுபோதையில் கால்களை கட்டிக்கொண்டு அவரே கடலில் குதித்து தற்கொலை செய்துகொண்டிருக்கலாமென உறவினர்தரப்பில் தெரிவிக்கப்பட்டது

நேற்று பிற்பகல் சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ் அரசினர் வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்தது. (21)

## தென் மாகாணத்தில் 3000 பொதுக் கூட்டங்கள்

(கொழும்பு)

நடந்து முடிந்த தென் மாகாண சபைத் தேர்தலின் போது மூவாயிரத்துக்கும் அதிகமான பொதுக் கூட்டங்கள் நடைபெற்றன 5400 சதுர கிலோ மீட்டர்களைக் கொண்ட தெற்கில் தேர்தல் காலத்தில் பெருந்தொகையான எண்ணிக்கையில் கூட்டங்கள் நடந்தது இது தான் முதற்தடவை.

## மரண அறிவித்தல்கள்

### வேலுப்பிள்ளை சிங்காரம்

(முன்னாள் பிரபல அரச ஒப்பந்தகாரர்)

காரைநகர் தன்னையைப் பிறப்பிடமாகவும் தற்போது றெயில்வே வீதி கொக்குவில் கிழக்கில் வசித்தவருமான வேலுப்பிள்ளை சிங்காரம் 28-3-94 திங்கள் அன்று காலமாகிவிட்டார். அன்னார் சின்னம்மாவின் அன்புக் கணவரும், சரஸ்வதியின் பாசமிகு தந்தையும், இ. பாலசுப்பிரமணியத்தின் (மலர் றேடர்ஸ் கொழும்பு) அன்பு மாமனாரும், வளர்மதி, மலர்விழி, கலைச்செல்வி, மணிவண்ணன், பாலஸ்ரீதரன்

## துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா

கடமையை உதாசீனம் செய்த அதிகாரிக்கும் கடமையை நூறுவீதம் சரியாக செய்த அதிகாரிக்கும் அவர் ஓய்வு பெறும்போது அல்லது மாற்றலாகிச் செல்லும் போது கடமை வீரன், கண்ணியத்தின் காவலன், கட்டுப்பாட்டின் செம்மல் என்னும் சம்பிரதாயபூர்வமான வாழ்த்துரைகள் மேடைகள் தோறும் பேரிருள் அகல ஒலிபரப்பும் பேரறிஞர் கூட்டங்களும் இன்னமும் உண்மையில் பேரிருளிலிருந்து விடுபடவில்லை. கொழும்பிலிருந்து தாயகம் நோக்கி புறப்பட்ட வேளையில் நெடுங்கேணிப் பாடசாலையில் நள்ளிரவைக்கழிக்கவேண்டிய தொரு சூழ்நிலை உங்களுக்கு ஏற்பட்டபோது, அதிபர் தனது விடுதியறையில் தங்குமாறு விடுத்த அழைப்பை ஏற்க மறுத்து, பயணிகளோடு பயணியாக பாடசாலை மண்டபத்தில் உறங்கிய உங்களின் சமத்துவம் நெருக்கரையோரங்களிலிருக்கும் தேநீர் கொட்டில்களில் தேநீர் அருந்திய உங்கள் எளிமை, பல்கலைக்கழக பாதுகாப்பு உத்தியோகத்தர்களை உங்களைப் பரிசோதித்து வளாகத்தினுள் அனுமதிக்கும்படி நீங்கள் விடுத்த பணிப்புரையின் கடமையுணர்வு, நண்பகல் 12 மணியில் கோரமிகு கொடூர வெயிலில் 1991 சித்திரை வருடப்பிறப்பன்று ஊற்று கிராமிய விழாவிற்கு வரண் மகாவித்தியாலயத்திற்கு துவிச்சக்கரவண்டியில் நீங்கள் வந்தடைந்த நிகழ்வு உங்களை பேரிருள் அகற்ற பேராசிரியர் என்பதற்குரிய ஆதாரச்சான்றுகளாகும்.

கொடிகாமம் கொத்தணியில் ஐயனார் கோவிலடி, மிருசுவில் வடக்கு, நாவற்காடு, தாவளைஇயற்றாலை, விடத்தற்பளை, கெற்பெலி, கச்சாய் கோவிலடி, புங்கடி, அல்லாரை, அறுகம்புலம் ஆகிய பத்து கிராமங்களின் ஆயிரம் ஏழை விவசாயிகளின் கண்ணீரைத் துடைத்து எங்களின் வாழ்வினை மேம்படுத்திய உங்களின் கருணை வெள்ளம் எங்களுக்கு கனவல்ல, நினைவல்ல, காட்சியுமல்ல; காலத்தாலழியாத அஜந்தா ஓவியங்களாகிவிட்டன.

தங்களை பல்கலைக்கழக தலைமைத்துவம் விட்டகன்றும், படித்தவர்களின் உறவு பிரிவடைந்தும் எம் ஆயிரம் ஏழை உள்ளங்களிலிருந்து நீங்கமுடியாத தலைமைத்துவத்தை ஊற்று நிறுவனம் பற்றிக்கொண்டதென்பதில் நாம் அடையும் ஆனந்தக் கண்ணீரை தங்களின் பிரிவுபசாரத்திற்கு காணிக்கையாக்குகிறோம்.

**ஊற்று நிறுவன கொடிகாமம் கொத்தணி கழகங்கள் சார்பில் தொண்டர்**
**சோதிநாதன்** (7874)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 81-ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1994-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 29 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

கல்விப் பணிப்பாளரும், பல்கலைக்கழக பேரவை உறுப்பினருமாகிய திரு. இரா. சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

அனைத்து மாணவர்களுக்கும் சான்றிதழ்களும் விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினரால் வழங்கப்பட இருக்கின்றன.

இதே போன்ற நன்முறை நடவடிக்கைகள் இங்கு றாங்கந்த பகுதியிலும் நடைபெற்று வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## 6-ம் ஆண்டு நினைவு அஞ்சலி — 90-ம் நாள் நினைவு அஞ்சலி





**திரு. அந்தோனிப்பிள்ளை இராசையா**

**திருமதி அந்தோனிப்பிள்ளை மேரி மியூறியல்**

பிறப்பு: 17 - 11 - 1919 இறப்பு: 29 - 12 - 1998

(சுருவில் ஊர்காவற்றுறை)

சீவியத்தில் என்னை நேசித்தவர்களே
மரணத்திலும் என்னை நேசியுங்கள்

இவர்களின் ஆன்ம இளைப்பாற்றிற்காக 29 - 03 - 94 காலை 6 மணிக்கு புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் இரங்கற் பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இவர்களின் பிரிவால் துயருறும்

**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்**

இல: 12/4, 2-ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

(சி-8942)

ஆகியோரின் அன்புப் பேரனும், சிவசுப்பிரமணியம், சுந்தரம்மாவின் சகோதரரும், அரசரத்தினம், அன்னலட்சுமி ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக இன்று 03மணிக்கு கொக்குவில் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

றெயில்வே வீதி, தகவல்: பா சரஸ்வதி
கொக்குவில் கிழக்கு (7875) (மகள்)

## திரு. மு. திருமூர்த்தி

தெல்லிப்பழையை பிறப்பிடமாகவும், சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட மு. திருமூர்த்தி 28-3-94ல் காலமானார். அன்னார் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், சுந்தரலிங்கம், மணிமேகலா, றஞ்சன் ஆகியோரின் அன்புத் தகப்பனும் ஜனா, தேவராஜா (உரிமையாளர் அன்ரன் பேக்கரி யாழ்ப்பாணம்) கமலா ஆகியோரின் மாமனாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 29-3-94இன்று 10மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பின்னர் சங்கானை விளாவெளி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:

இலம்புப்புளியடி, சி. தேவராஜா
சங்கானை (7871) (மருமகன்)

## திருமதி பரமேஸ்வரி கனகலிங்கம்

(இளைப்பாறிய ஆசிரியர்)

உப்புக்கேணி வீதி, சாவகச்சேரியைச் சேர்ந்த திருமதி பரமேஸ்வரி கனகலிங்கம் 28 3.94 அன்று காலமானார். இவர் திரு. செல்லையா கனகலிங்கத்தின் (இளைப்பாறிய ஆசிரியர்) அன்புமனைவியும், திரு. சின்னத்தம்பியின் (இளைப்பாறிய அதிபர், வீரசிங்கம் வித்தியாலயம்) அன்பு மகளும், குருபரன் (U K) கிரிதரன் (மருத்துவ பீடம் யாழ் பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத்தாயாரும் ஆவார், ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
உப்புக்கேணி வீதி, க. கிரிதரன்
சாவகச்சேரி. (மகன்)

(7876)